# ராஜேஷ்குமார்

₹15/-

எக்ஸலண்ட்
நாவல்




# கருப்பு ஞாயிறு
# சிவப்புத் திங்கள்

மின்னூலாக்கம்
செல்லா
www.minnoolakam.blogspot.com

மின்னூலாக்கம் : செல்லா

# கருப்பு ஞாயிறு சிவப்புத் திங்கள்

## ராஜேஷ்குமார்



## 1

அவளைப் பார்க்கும் போதும்
சொல்ல நினைக்கிறேன்.
அவள் சிரிக்கும் போதும்
சொல்ல நினைக்கிறேன்.
அவள்என்னை முத்தம் இடும்போதும்
சொல்ல நினைக்கிறேன்! ஆனால்-
சொல்ல முடியவில்லையே!
கடவுளே! எனக்கு சீக்கிரம்
பேசும் சக்தியைக் கொடு-
அவளை 'அம்மா' என்று கூப்பிட!

—மூன்று மாத குழந்தை சொல்ல
நினைத்த கவிதை.

அந்த அதிகாலை நேரத்திலேயே விழிப்பு வந்துவிட்டதுநீலக்கண்ணனுக்கு.போர்வையை உதறிவிட்டு எழுந்து உட்கார்ந்தான்.

பாதி திறந்திருந்த ஜன்னல் வழியே தெரிந்த வேப்பமரத்தில் பறவைகள் மாநாடு போட்டுக் கத்திக் கொண்டிருக்க, குழந்தை சூரியனின் சடாத குங்கும நிற வெளிச்சம் ஜன்னல் கண்ணாடியில் பிரதிபலித்தது.

ஜன்னலை நன்றாகத் திறந்த வைத்தான் நீலக்கண்ணன். குளிர்காற்று முகத்தில் வந்து மோதியது. பறவைகளின் சத்தம் இப்போது இரைச்சலாய் மாறியிருந்தது. அதிலும் ஒரு இன்னிசை ஒளிந்திருந்தது.

"குட்மார்னிங் என் மணாளனே...!"

தனக்குப் பின்பக்கம் குரல் கேட்டு திரும்பிப் பார்த்தான். அவனுடைய மனைவி மிருணாளினி கையில் காப்பி டம்ளரோடு நின்றிருந்தாள். அந்நேரத்திற்கே தலைக்குக் குளித்ததின் அடையாளமாய் ஈரத்துண்டு தலையின் பின்பக்கம் இடம்பிடித்து ஒரு கொண்டையாய் மாறியிருந்தது. நீலக் கண்ணன் இமைக்காமல் மிருணாளினியைப் பார்த்தான். அவன் பக்கத்தில் வந்து அவனுடைய தலையை ஒரு தட்டுத் தட்டினாள்.

"என்ன அப்படி ஒரு லுக்...?"

"சொல்லட்டுமா?"

"சொல்லுங்க..."

"இன்னிக்கு உன்னோட அழகில் ஒரு ப்ளஸ் பாயிண்ட் தெரியுதே...! என்ன காரணமாய் இருக்க முடியும்ன்னு யோசனை பண்ணிட்டிருக்கேன்."

"வாரத்துக்கு ஒரு தடவை இப்படி சொல்லி என்னோட தலையில் ஐஸ் வைக்கிறதே உங்களுக்கு வழக்கமா போயிடுச்சு... நீங்க இப்படி ஐஸ் வைச்சாலே உங்களுக்கு ஏதோ காரியம் ஆகணும்னு அர்த்தம். சொல்லுங்க இப்ப உங்களுக்கு என்ன வேணும்...?"

"பாத்தியா தப்பா புரிஞ்சுட்டே...! எனக்கு ஏதாவது வேணும்ன்னா நான் உன்கிட்டே நேரிடையாய் கேட்பேனே தவிர ஐஸ் வைக்கிற வேலையெல்லாம் எனக்குத் தெரியாது. இன்னிக்கு நீ ரொம்பவும் அழகாய் இருக்கேன்னு சொன்னது நூற்றுக்கு நூறு

உண்மை. அதுக்குக் காரணம் என்னான்னு எனக்குத் தெரியலை.”

“உங்களுக்கு இப்போ காரணம் தெரியணும்?”

“ஆமா...”

“சொல்லட்டுமா?”

“சொல்லு...”

மிருணாளினி கணவனை ஒரு புன்னகை யோடு பார்த்தாள். “மனைவி சில நேரங்களில் கணவனுக்கு அழகாகவும், கணவன் சில நேரங்களில் மனைவிக்கு அழகாகவும் தெரிவதற்குக்காரணம் அன்றைக்கு அவர்கள் இருக்கும் மனநிலைகளைப் பொறுத்தது. இன்னிக்கு என்னோட ‘பர்த்தே’ன்னு உங்களுக்குத் தெரியும். அதனால உங்க மனசுக்குள்ளே ஒரு பத்து பர்சன்ட் எக்ஸ்ட்ரா செண்ட்டிமெண்ட் டெவலப் ஆகியிருக்கும். அதனோட வெளிப்பாடுதான் நான் உங்களுக்கு அழகாய் காட்சி கொடுத்துட்டு இருக்கிறது.”

“ஓ.கே... மிரு... ஐ அக்ரி வித் யுவர் ஸ்டேட்மெண்ட். சரி... இப்படி வந்து உட்கார்...”

“எ...எ...என்னது... உட்கார்றதா...? நான் குளிச்சாச்சு... நீங்க இன்னும் குளிக்கலை...”

“அதனால என்ன...?”

“அதனால என்னவா...? மொதல்ல எந்திரிச்சு பெட்ஷீட்டை மடிச்சு வெச்சுட்டு பாத்ரூமுக்குப் போங்க. இன்னும் ஒரு அரை மணி நேரத்துக்குள்ளே நீங்க குளிச்சு ரெடியாகணும்.”

“காப்பி...?”

“நோ காப்பி...”

“ஏன்...?”

“பால் இன்னும் வரலை... நீங்க போய் குளிச்சு ரெடியாறதுக்குள்ளே பால்வந்துடும்.”

"சரி... இன்னிக்கு உன்னோட பொறந்த நாளும் அதுவுமாய் காலையில் என்ன டிபன்...?"

"அது... சஸ்பென்ஸ்..."

"மத்தியானம் லஞ்ச்?"

"அதுவும் சஸ்பென்ஸ். நீங்க டைனிங் டேபிளுக்கு வரும்போதுதான் அயிட்டம் என்னான்னு தெரியும்" மிருணாளினி சொல்லிக் கொண்டிருக்கும் போதே நீலக் கண்ணனின் செல்போன் தலையணைக்குக் கீழே இருந்து கூப்பிட்டது.

"இந்நேரத்துக்கு யார்ன்னு தெரியலையே?" செல்போனை எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தான். செல்போனின் டிஸ்ப்ளேயில் ஒரு புது எண் பளிச்சிட்டது. காதுக்குப் பொருத்தி மெல்ல குரல் கொடுத்தான்.

"எஸ்..."

"மிஸ்டர் நீலக்கண்ணன்?"

"ஹோல்டிங்..."

"ஸார்... என்னோட பேர் வெற்றிவேல் முருகன். என்னை சுருக்கமாய் எல்லோரும் வி.வி.எம்.ன்னு கூப்பிடுவாங்க. நான் சமூக நலன் சம்பந்தப்பட்ட ஒரு அமைப்பை நடத்திட்டு வர்றேன். அந்த அமைப்போட பேர் 'சாமரம்.' நீங்க கூட கேள்விப்பட்டு இருக்கலாம்..."

"எஸ்...எஸ்... பேப்பர்ல பார்த்த ஞாபகம்..."

"ஸார்...! உங்க கிட்டே நான் ரெண்டு நிமிஷம் பேசலாமா?"

"பேசலாமே!"

"ஸார்...! என்னோட 'சாமரம்' என்கிற சமூக நல அமைப்போட நோக்கம் வாழ்க்கையில் விரக்தியும், வெறுப்பும் அடைந்து இந்த உலகத்தில் வாழவே பிடிக்காத இளைஞர் களுக்கும் இளம் பெண்களுக்கும் கவுன்

ஸிலிங் கொடுத்து அவங்களுக்கு மனோ திடத்தைக் கொடுக்கிறது தான். நாங்க கவுன்ஸிலிங் கொடுத்த காரணத்தால எத்தனையோ பேர் மனம் மாறி மறுபடியும் ஒரு புது வாழ்க்கையை ஸ்டார்ட் பண்ணி சந்தோஷமாய் இருக்காங்க.... இந்த ‘சாமரம்’ அமைப்பு தொடங்கி பத்து வருஷமாகப் போகுது. அதைக் கொண்டாடும் விதமா சில நிகழ்ச்சிகளுக்கு நாங்க ஏற்பாடு பண்ணி யிருக்கோம் ஸார். அதுக்கு உங்க ஒத்துழைப்பு வேணும் ஸார்...”

“யூ மீன் டொனேஷன்...?”

“நோ...நோ...! வீ டோண்ட் வாண்ட் எனி டொனேஷன் ஸார். எங்களுக்கே போதுமான அளவுக்குப் பணம் இருக்கு. நாங்க எதிர்பார்க்கிற ஒத்துழைப்பு வேற ஸார்.”

“எது மாதிரியான ஒத்துழைப்பு வேணும்னு எதிர்கார்க்கறீங்க?”

“ஸார்... நீங்க நடத்திட்டு வர்ற நிறுவனத்தைப் பத்தி எங்களுக்குத் தெரியும். கூரியர் சர்வீஸ் பண்ண எத்தனையோ நிறுவனங்கள் புற்றீசல் போல் வந்துட்டு இருந்தாலும் உங்களோட கூரியர் சர்வீஸான ‘ப்ராம்ப்ட் கூரியர்ஸ்’ தான் மக்கள் மத்தியில் பிரபலம் ஆகியிருக்கு. அதுக்கான காரணம் அந்தத் தொழிலை நீங்க பணம் சம்பாதிக்கும் தொழிலாய் நினைக்காமல் மக்களுக்கு சரியான முறையில் சேவை செய்யணும்னு நினைக்கிறதுதான். இந்த டெடிகேஷன்... ஐ மீன்... அர்ப்பணிப்பு எல்லார்க்கிட்டேயும் இருக்கிறது கிடையாது. உங்க கிட்டே அது இருக்கிற காரணத்தால்தான் இன்னிக்கு நீங்க ஒரு கூரியர் நிறுவனத்துக்கு வெற்றிகரமான எம்.டி.யாய் இருக்கீங்க.”

நீலக்கண்ணன் சிரித்தான்.

“உங்க பாராட்டுக்கு நன்றி...”

“இந்த வெற்றிக்கு என்ன காரணம்?”

“சின்ஸியார்ட்டி அண்ட் ஹார்ட் வொர்க்.”

“அது உண்மைதான் ஸார்... பட்... நான் கேள்விப்பட்ட விஷயம் வேற மாதிரி இருந்தது ஸார்.”

“வேற மாதிரின்னா...?”

“அது...வந்து...”

“எந்த தயக்கமும் வேண்டாம்... நீங்க என்கிட்டே என்ன கேக்கணுமோ... அதைக் கேக்கலாம்...”

“ஸார்... உங்களுக்கு ஃபாதர் மதர் இல்லைன்னும், ஒரு அநாதைவிடுதியில்தான் படிச்சதாகவும், படிப்பைஸ்கூல்ஃபைனலுக்கு மேல் தொடர முடியாததால் உங்க பதினாறாவது வயசிலேயே ஒரு கூரியர் கம்பெனியில் ‘கலெக்ஷன் பாய்’ வேலையில் சேர்ந்த தாகவும், அதே நிறுவனத்தில் ஏழு வருஷ காலம் வேலை செய்த பின்னாடி நீங்களாகவே சிறிய அளவில் பேங்கில் கொடுத்த கடன் உதவியோட ‘ப்ராம்ப்ட் கூரியர்’ என்ற நிறுவனத்தை ஆரம்பித்ததாகவும் சொல்லப் படுவது உண்மையா?”

“உண்மைதான்...”

“அது உண்மைன்னா... நீங்க எனக்கு ஒரு உதவி பண்ணணும் ஸார்...”

“என்ன உதவி சொல்லுங்க...”

“இன்னிக்கு சாயந்தரம் எங்க ‘சாமரம்’ அமைப்பு ஏற்பாடு பண்ணியிருக்கிற ‘உன்னாலும் முடியும்!’ என்கிற நிகழ்ச்சியில் கலந்துக்கணும். எங்ககிட்ட கவுன்ஸிலிங் எடுத்துட்டு இருக்கிற ஐநூத்தி சொச்சம் பேர் கூடுகிற மண்டபத்தில் நீங்க ஒரு அரைமணி நேரம் பேசணும். அந்தப் பேச்சில் நீங்க எப்படி இந்த கூரியர் தொழிலில் முன்னுக்கு வந்து வெற்றிகரமான இடத்தைப் பிடிக்க முடிஞ்

சுதுன்னு சொல்லணும். நீங்க பேசற அந்தப் பேச்சு விரக்தி, தோல்வியின் எல்லையில் இருக்கிற எத்தனையோ இளைஞர்களுக்கு ஊட்டச் சத்தாய் அமையும்."

நீலக்கண்ணன் குரலை இழுத்தான்.

"நீங்க சொல்றது சரிதான்...பட்..."

"ஸார்... 'பட்'ன்னு ஒரு சின்ன வார்த்தையைப் போட்டுட்டு நான் கலந்துக்க முடியாதுன்னு சொல்லிடாதீங்க. எங்களோட அழைப்பை ஏத்துக்கிட்டு சாயந்தரம் ஆறு மணிக்கு மேல் வந்து ஒரு அரைமணி நேரம் பேசினா கூடப் போதும்."

"உங்க பேர் என்ன சொன்னீங்க...?"

"வெற்றிவேல் முருகன். சுருக்கமாய் என்னை வி.வி.எம்.ன்னு கூப்பிடுவாங்க."

"இதோ பாருங்க... மிஸ்டர் வி.வி.எம்...! நான் என்னோட தொழிலில் வெற்றி யடைஞ்சதுக்குக் காரணம், நான் என்னோட வாழ்க்கையில் சில பிரின்ஸிபல்லை ஸ்டிரிக்டா ஃபாலோ பண்றது தான். ஒரு வாரத்துல ஆறு நாள் என்னோட தொழிலுக்கும் மீதி ஒரு நாளான ஞாயிற்றுக் கிழமையை என்னோட வீட்டுக்கும் நான் ஒதுக்கி இருக்கேன். அந்த ஞாயிற்றுக்கிழமை என்னுடைய மனைவிக்கு மட்டும்தான். மற்றவர்களுக்கு இல்லை."

"ஸார்... ப்ளீஸ்..."

"நீங்க ஒரு ப்ளீஸ் போட்டா நான் ரெண்டு ப்ளீஸ் போடுவேன். இன்னிக்கு வந்து இருக்கிற இந்த ஞாயிற்றுக்கிழமையில் ஒரு ஸ்பெஷல் என்னான்னா டு டே ஈஸ் மை பிலவ்ட் ஒய்ஃப்ஸ் பர்த்டே...! என் மனைவியோட பர்த்டேயை நான் செலிபரேட் பண்ண வேண்டாமா...?"

“சர்ட்டன்லி...!”

“அப்புறம்... உங்க ஃபங்ஷனுக்கு வரச் சொல்றீங்க...?”

“ஓ.கே.... ஸார்...! எங்க நிகழ்ச்சிக்கு நீங்க நாளைக்கு வரமுடியுமா...?”

“நாளைக்குத்தானே...? வர்றேன்... பட் ஒரு சின்ன கண்டிஷன்...”

“என்ன... ஸார்?”

“சரியா சாயந்தரம் ஆறு மணிக்கு வருவேன். அரைமணி நேரம் பேசுவேன். ஆறரை மணிக்கெல்லாம் கிளம்பிடுவேன். ஏன்னா மேடையில் வெட்டியாய் உட்கார்ந்துட்டு நேரத்தைக் கொல்றதுல எனக்கு உடன்பாடு கிடையாது. என்னோட நிபந்தனைக்கு நீங்க சரின்னு சொன்னா நான் வர்றேன்.”

“நீங்க ஒரு அரை மணி நேரம் வந்துட்டுப் போனாலே போதும் ஸார்!”

“எங்கே வரணும்...? அட்ரஸ் சொல்லுங்க.”

“அபிபுல்லா ரோட்ல ‘சாமரம்’ அலுவலகம் இருக்கு ஸார். நீங்க அந்த ரோட்டுக்குள்ளே நுழையும் போதே போர்டு தெரியும்.”

“வந்துடறேன்...”

“ரொம்ப நன்றி ஸார்...”

“இட்ஸ் ஓ.கே...!” சொன்ன நீலக்கண்ணன் பக்கத்தில் நின்ற மிருணாளினியைப் பார்க்க - அவள் கேட்டாள்.

“போன்ல யார்ங்க...?”

நீலக்கண்ணன் விபரத்தை சொல்ல மிருணாளினி ஆச்சர்யப்பட்டாள்.

“என்னது...! தற்கொலை பண்ணிக்கப் போறவங்களுக்கு கவுன்ஸிலிங்கா...?”

"ம்... இருக்கே...! வெளிநாட்ல, இது மாதிரியான அமைப்புகள் நிறைய இருக்கு... இப்போ மெல்ல மெல்ல இந்தியாவுக்குள்ளும் நுழைஞ்சு எல்லா நகரங்களுக்கும் பரவிடுச்சு. சாமரம்ன்னு ரொம்பவும் பொருத்தமான ஒரு பேரை வெச்சிருக்காங்க சென்னையில் இருக்கிற இந்த அமைப்பைச் சேர்ந்தவங்க..."

"இன்னிக்கு என்னோட பிறந்த நாள். அந்த பேச்செல்லாம் இன்னிக்கு வேண்டாம். எனக்கு என்ன கிஃப்ட் தரப் போறீங்க... அதை மொதல்ல சொல்லுங்க..."

நீலக்கண்ணன் கண்ணை சிமிட்டினான். "மிரு! உன்னோட பிறந்த நாளைக்கு என்ன கிஃப்ட் தர்றதுன்னு போன வாரமே டிசைட் பண்ணி, வாங்கியும் வெச்சுட்டேன்..."

"என்னது...! வாங்கி வெச்சுட்டீங்களா?"

"ஆமா..."

"இதே வீட்ல இருக்கா...?"

"ஆமா..."

"என் பார்வையில் படவேயில்லையே...?"

"உன்னோட கண்ணுக்குத் தட்டுப்படற மாதிரியா வெப்பேன்? அதை இதே வீட்ல ஒரு இடத்துல பத்திரமா வெச்சிருக்கேன்."

"நான் அதை இப்பவே பார்க்கணும்."

"மொதல்ல நான் குளிச்சுட்டு வந்துடறேன்... குளிக்காமே கிஃப்ட் கொடுக்கக் கூடாது..."

"சரி... போய் குளிச்சுட்டு வாங்க..."

நீலக்கண்ணன் கிளம்பினான். ஹாலைக் கடந்து வீட்டின் பின்பக்கம் இருந்த குளியலறையை நோக்கிப் போனான்.


கணவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்த மிருணாளினி பிறகு

மெதுவாய் நடந்து போய் சமையலறைக்குள் நுழைந்தாள். கதவைத் தாழிட்டுக் கொண்டவள் சமையல் மேடைக்குக் கீழே இருந்த மண்ணெண்ணெய் நிரம்பியிருந்த ஐந்து லிட்டர் கேனை எடுத்து நிதானமாய் தலையிலும் மார்பிலும் சொத சொதவென்று ஊற்றிக் கொண்டாள். திட்டின் மேல் இருந்த தீப்பெட்டியை எடுத்து ஒரு குச்சியை உருவி உரசினாள்.

ஒரு தீ சின்ன தீ நாக்கு உற்பத்தியாகி காற்றில் ஆட அதை அப்படியே தன் மார்புக்குக் கொடுத்தாள்.

தீப்பிழம்பு விஸ்வரூபம் எடுத்து மிருணாளினியை ஒரு விநாடி நேரத்திற்குள் விழுங்கி, சுவைக்க ஆரம்பித்தது. சடச்சட வென எலும்புகள் வெடிக்க, சதை உருகியது. மிருணாளினி அலறித் துடிக்காமல் அப்படியே நின்றாள்.

இரண்டே நிமிடம்...! நின்று சிறிது சிறிதாய் உடம்பு மடங்கி ஐந்தடி உயர கரிக்கட்டையாய்ச் சாய்ந்தாள்.



## ௨

**தூக்கத்தில் இருப்பவனை எழுப்பாதே! அவன் அப்போதுதான் பாவம் செய்யாமல் இருக்கிறான்.**

நியூடெல்லி.

விஞ்ஞான மருத்துவக் கழகத்தின் பிரம்மாண்டமான ஏழு மாடிக் கட்டிடம். சாயந்தர ஏழுமணி.

ஆறாவது மாடியின் மையத்தில் இருந்த அந்தச் சிறிய கான்ஃப்ரன்ஸ் ஹாலில் சர்வதேச உடல்நல கருத்தரங்கம் அமைதி யாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

மொத்தம் 69 நாடுகளைச் சேர்ந்த மருத்துவ வல்லுநர்கள் பளீரிடும் வழுக்கைத் தலைகளோடு அரைவட்ட வரிசையில் உட்கார்ந்திருந்தார்கள். கைகளில் கற்றை கற்றையாய் தாள்கள். காதுகளில் ஆட்டோ ட்ரான்ஸ்லேட்டர் டிவைஸ்கள்.

கோட் பாக்கெட்டுகளில் மைக்ரோ டேப் ரிக்கார்டர்கள் உயிரோடு இருந்து மேடையில் பேசப்படும் கருத்துக்களை உள்வாங்கி ஜீரணித்துக் கொண்டிருந்தன. ஹாலின் அகலமான அந்த 70 எம்.எம். மேடையின் ஒரு ஓரத்தில் நின்றபடி இந்தியாவின் மருத்துவ வல்லுநரான ஹரிகோவிந்த் தெளிவான ஆங்கிலத்தில் நிதானமான குரலில் பேசிக் கொண்டிருந்தார்.

"ஒரு மனிதனின் உடல்நலம் என்கிற விஷயம், அவன் கருவாக தாயின் வயிற்றில் இருக்கும் போதே ஆரம்பமாகிவிடுகிறது. அவன் ஒரு குழந்தையாக தாயின் கருவறை யில் இருக்கும் போது கடிகாரத்தின் பெண்டுலம் சத்தம் போல் தாயின் இதயத்துடிப்பைக் கேட்டுக் கொண்டு இருக்கிறான். நாட்கள் செல்லச் செல்ல தாயின் இதயத் துடிப்பை மட்டுமல்லாமல் தாயின் தும்மல் ஒலியையும், இருமல் சத்தத்தையும் கேட்கிறான். பிரசவ நாள் நெருங்க நெருங்க தாயின் இரைப் பையில் உணவு ஜீர்ணமாகும் சத்தத்தையும், வெளியே நடைபெறுகிற உரையாடல் களையும் கேட்கிறான். இதில் ஆச்சரியப் படக்கூடிய ஒரு விஷயம் என்னவென்றால், ஒரு குழந்தை வயிற்றில் இருக்கும்போது நாம் கேட்காத ஒலிகளைக் கூட குழந்தை

கேட்கக்கூடும் என்கிறது ஜான் ஹம்பர்க் என்கிற டாக்டர் ஒருவரின் ஆராய்ச்சிக் கட்டுரை. அந்தக் கட்டுரையில் சொல்லப் பட்ட இன்னொரு கருத்து, வெளியில் இருக்கும் நாம் 20000 ஹெர்ட்ஸ் என்ற ஒலி அளவு வரை கேட்க முடியும் என்றால் தாயின் வயிற்றில் இருக்கும் ஒரு குழந்தை 1,80,000 ஹெர்ட்ஸ் ஒலி அளவு வரை கேட்கக்கூடும். இதற்குக் காரணம் கருப்பைக்குள் குழந்தை பெரிதாகி வளரும் போது தாயின் வயிற்றுத் தோல் மெலிந்து லேசாகிவிடுகிறது. அந்த மெல்லிய தோல் வழியாக சூரிய ஒளியும் ஊடுருவி உள்ளே போவதால் அந்த வெளிச்சத்தின் காரணமாக அதன் உறக்கம் கலைகிறது. அதனால் அசைகிறது. தாய் பேசுவதையும், கோபத்தில் கத்துவதையும் கவனிக்கிறது. ஒரு தாய் கோபப்படும் போதோ அழும் போதோ அது பயந்து போய் விடுகிறது. சிலசமயம் தாயின் எதிர்மறையான உணர்வுகள் குழந்தையையும் தாக்கி அதன் மூளைப் பகுதியில் பதிவாகின்றது. அதன் காரணமாகக் கருவில் இருக்கும்போதே குழந்தையின் ஆரோக்கியம் பாதிக்கப் படுகின்றது. ஒரு தாயின் கோபம், துயரம், தாபம் அனைத்தும் குழந்தையைத் தாக்குவ தால் குழந்தை ஒருவிதமான வேதனையை அனுபவிக்கிறது. அப்படி அது வேதனையை அனுபவித்தாலும் அழாமல் இருப்பதற்கு என்ன காரணம் தெரியுமா?”

டாக்டர் ஹரி கோவிந்த் இந்த இடத்தில் பேச்சை நிறுத்திவிட்டு அரங்கில் அமர்ந்து இருந்த மருத்துவ வல்லுநர்களை ஏறிட்டார்.

“யாரேனும் இதற்கு விடை அளிக்க முடியுமா?”

அரங்கில் இருந்த அத்தனை டாக்டர்களும் அமைதிகாத்தனர். ஹரிகோவிந்த் பதினைந்து

விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு பேச்சைத் தொடர்ந்தார்:

"நான் செய்துள்ள ஒரு ஆய்வின் அறிக்கை இப்படி சொல்கிறது. அதாவது 'மார்ஃபின்' எனப்படும் போதை மருந்தை விட மூன்று மடங்கு சக்தி வாய்ந்த பீட்டா - என்டோர்ஃபின் எனப்படும்பொருள், தாயின்மூளையிலிருந்து கருவில் இருக்கும் குழந்தைக்குப் போகிறது. அந்த போதைப் பொருள் குழந்தையை எப்போதும் ஆனந்தமான உறக்கத்தில் வைத்து இருப்பதால் குழந்தை வலியையும் வேதனையையும் வெளிப்படுத்த அழுவது இல்லை."

டாக்டர் ஹரிகோவிந்த் இப்படிச் சொல்லிய தும் அரங்கத்தில் கைத்தட்டல் எழுந்தது. ஒரு நிமிடம் வரை நீடித்த கைத்தட்டல் மெல்ல அடங்கியதும் மறுபடியும் பேச்சை ஆரம்பித்தார்.

"எனவே, ஒரு மனிதனின் உடல் ஆரோக்கியம் மற்றும் மனம் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் எல்லாமே அவன் கருவில் இருக்கும்போதே தொடங்கிவிடுகின்றன. அவன் இந்த உலகில் பிறந்ததுமே தொடர் கின்றன. பலவித நோய்களுக்கு அவனுடைய உடல் உட்படுகிறது. அந்த நோய்களைக் குணப்படுத்த வேண்டிய பொறுப்பும், கட்டாயமும் இன்றைய மருத்துவ உலகிற்கு இருக்கிறது. மனிதனின் நோய்களைக் குணப் படுத்தும் 'கான்செப்ட்'டுகள் ஒவ்வொரு மருத்துவர்க்கும் வேறுபடுகிறது. நான் கடந்த சில ஆண்டுகளாக மேற்கொண்ட ஆய்வு களின் விளைவாக ஒரு புதிய கான்செப்ட்டை உருவாக்கி அது சம்பந்தமான கட்டுரை ஒன்றின் நகல்களை உங்களுக்கெல்லாம் படிக்கக் கொடுத்து இருக்கிறேன். நீங்களும் படித்து இருப்பீர்கள். அவற்றைப் படித்து

முடித்ததும் சில கேள்விகள் உங்கள் மனங் களில் எழலாம். அந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்கவும் நான் கடமைப் பட்டுள்ளேன். இப்போது கேள்வி நேரம்."

அரங்கில் இப்போது சில விளக்குகள் உயிர்பெற்று, ஒட்டு மொத்த ஹாலையும் வெளிச்சமாக்கியது.

முன் வரிசையில் இருந்த அமெரிக்க டாக்டர் ஹெப்பார்ட், தனக்கு முன்பாய் இருந்த மைக்கில் பேசினார்.

"இந்திய டாக்டர் ஹரிகோவிந்த் அவர்களின் 'உயிரின் பசை' என்ற மருத்துவக் கட்டுரையைப் படித்தேன். கட்டுரையின் முக்கியக் கருத்து C.A.M. எனப்படும் 'செல்லுலார் அட்ஹெசன் மெட்ரீய'லைக் (Celluar Adhesion Material) கட்டுப் படுத்தினால் மனித உடம்பில் ஏற்படும் பலவிதமான நோய்களுக்கு ஒரு 'குட்பை' சொல்லி, வழியனுப்பி வைத்துவிடலாம்' என்பதுதான். இது ஒரு நல்ல கான்செப்ட்தான். இருந்தாலும் என் மனதில் சில கேள்விகள் உற்பத்தியாவதை என்னால் தடுக்க முடியவில்லை. என்னுடைய முதல் கேள்வி இதுதான்: C.A.M. எனப்படும் ஒரு பசை நம் உடம்பில் இயற்கையாக உற்பத்தியாகும் ஒரு அதிசயப் பசை. இதை நம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியுமா?"

அமெரிக்க டாக்டர் ஹெப்பார்ட் இந்தக் கேள்வியைக் கேட்டு முடித்ததும், ஹரி கோவிந்த் புன்னகை முகத்தோடு தன்னுடைய மைக்குக்கு உதட்டைக் கொடுத்தார். மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தார்.

"டாக்டர் ஹெப்பார்ட் அவர்கள் ஒரு தலைசிறந்த மருத்துவ விஞ்ஞானி. C.A.M.

எனப்படும் செல்லுலார் அட்ஹெசன் மெட்டீரியலைப் பற்றி அவர்க்கும் தெரியும். ஒரு மனித உடம்பில் உள்ள கோடிக் கணக்கான செல்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொண்டிருக்கும்காரணத்தினாலேயே மனிதன் ஒரு உருவமாய் தெரிகின்றான். இது கை, இது கால், இது தலை, என்று அடையாளப்படுத்திக் கொள்ளவும் முடிகிறது. செல்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொள்வதற்குக் காரணமான ஒருவகைப் பசையைத்தான் மருத்துவ உலகம் C.A.M. என்று அழைத்துக் கொண்டு இருக்கிறது. இந்தப் பசையைத்தான் நாம் 'உயிரின் பசை' என்று அழைக்கிறோம். ஒருவேளை நம் உடம்பில் இந்தப் பசை இல்லாது போனால் உடம்பு எப்படி இருக்கும்...? இலையில் ஊற்றிய தயிர் போல் வழிந்து ஓடும். இந்த சி.ஏ.எம். பசை 'கரு' வளர்ச்சி முதற்கொண்டு உடம்பில் பல்வேறு பணிகளைச் செய்து கொண்டு இருக்கிறது. உதாரணத்திற்கு ஒரு பணியைப் பற்றிக் குறிப்பிடுகிறேன். நான் முகச்சவரம் செய்து கொண்டிருக்கும்போது எதிர்பாராத விதமாய் என் கன்னப் பகுதியில் வெட்டுக்காயம் ஏற்படுவதாக வைத்துக் கொள்வோம். அந்த நிமிடமே நம் உடம்பு ஒரு பரபரப்புக்கும் பதட்டத்துக்கும் உட்பட்டு ஒரு கலவர பூமியாக மாறிவிடும். ரத்தத்தைப் பார்த்த கண்கள் மூளைக்கு செய்தியை அனுப்ப, மூளை உடனே கட்டளையிட்டு ஒரு ஆபத்து சிக்னலைக் காயம்பட்ட இடத்துக்கு அனுப்புகிறது. இந்த சிக்னலை 'கெமிக்கல் சிக்னல்' என்று நாம் அழைக்கலாம். இந்த கெமிக்கல் சிக்னல் கிடைத்தவுடன் காயத்துக்கு பக்கத்தில் உள்ள ரத்தத் தந்துகிகளின் சுவரில் சி.ஏ.எம்.

ஒட்டுப்பசை எக்ஸ்ட்ராவாய் தயாரிக்கப் படுகிறது. பிறகு அந்தப் பசை ரத்தத்தில் கலந்து ஒரு ஆம்புலன்ஸ் வேன் போல் விரைந்து காயம்பட்ட இடத்துக்குப் போய் சேர்கிறது. ரத்தத்தில் உள்ள ப்ளாட்லெட்கள் பசையோடு சேர்ந்து காயம்பட்ட இடத்தைச் சூழ்ந்து கொண்டு வெட்டுப்பட்ட மெல்லிய ரத்தக்குழாய்களை ஒட்டவைக்கும் முயற்சியில் ரிப்பேர் வேலையில் ஈடு படுகிறது. இப்படி தொடர்ந்து ஈடுபடுவதின் காரணமாக காயம் விரைவில் ஆறி குணமாகிறது. காயம் ஆறியதும் கெமிக்கல் சிக்னல் குறைந்து சி.ஏ.எம். பசை சுரப்பது மட்டுப்படுகிறது. நம் உடம்பில் ஏற்படும் காயங்களுக்கும், நோய்களுக்கும் ஏற்றாற் போல் இந்தப் பசை சுரக்கின்றது. ஒரு காயம் ஆறுவதற்கும், ஒரு நோய் குணமாவதற்கும் ஒரு குறிப்பிட்ட அளவு மட்டுமே பசை சுரக்க வேண்டும். குறைந்த அளவில் சுரப்பதும், மிக அதிக அளவில் சுரப்பதும் உடம்பின் ஆரோக்கியத்தைப் பாதித்துவிடும். மனிதர் களுக்கு புற்று நோய் எனப்படும் கேன்ஸர் உண்டாவதற்குக் காரணம் அந்த கேன்ஸர் செல்களில் பசையின் ஒட்டும் திறன் குறைந்து போவதுதான். இவ்வாறு கேன்ஸர் செல்களில் ஒட்டுப்பசை இல்லாதிருப்பதால் எளிதில் வழுக்கி ஓடி உடல் முழுக்கப் பரவுகின்றன. எனவே, எதிர்காலத்தில் மனிதர்களின் உயிர்க் கொல்லி நோயாக விளங்கும் கேன்ஸர் நோய் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டுமானால் சி.ஏ.எம். எனப்படும் செல் ஒட்டுப்பசை உற்பத்தியை நம் மருத்துவ அறிவின் துணை கொண்டு கட்டுப்படுத்த வேண்டும்."

டாக்டர் ஹெப்பார்ட் குறுக்கிட்டுக் கேட்டார்.

"அதைக் கட்டுப்படுத்தும் வழிமுறை உங்களுக்குத் தெரியுமா...? அதைப் பற்றிய ப்ராஜெக்ட் ஏதாவது ஆய்வில் உள்ளதா?"

"உள்ளது."

"அந்த ஆய்வு எப்போது முடியும்?"

"ஆய்வு முடிந்துவிட்டது."

"அறிக்கைத் தயாரா?"

"தயார்."

"பிறகென்ன... அந்த அறிக்கையைப் படிக்க வேண்டியதுதானே?"

"டாக்டர் ஹெப்பார்ட் அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும். அந்த அறிக்கையைப் படிப்பதற்கு இது பொருத்தமான அவை இல்லை என்பது என் கருத்து. வருகிற ஜூலையில் சிகாக்கோவில் சர்வதேச அளவில் மருத்தவ செமினார் ஒன்று நடைபெற உள்ளது. அந்த செமினாரில்தான் அந்த ஆய்வு அறிக்கையைப் படிக்கப் போகிறேன். அது தவிர..."

டாக்டர் ஹரிகோவிந்த் பேசிக் கொண் டிருக்கும் போதே தண்ணீர் நிரம்பிய டம்ளரோடு வந்த அந்த உதவியாள் டம்ளரை டைஸ் மேல் வைத்து அதற்குக் கீழே நான்காய் மடித்த காகிதத் துண்டையும் வைத்தார்.

அந்தக் காகிதத்தை எடுத்துப் படிக்கும்படி கண்களால் ஜாடை காட்டிவிட்டு நகர்ந்தார். ஹரிகோவிந்த் உள்ளுக்குள் உஷ்ணமானார்.

'என்ன காகிதம் அது...?'

மைக்கில் பேசிக்கொண்டே இடது கை விரல்களால் கண்ணாடி டம்ளர்க்குக் கீழே இருந்த காகிதத்தைப் பிடித்து மெல்ல இழுத்தார். பிரித்தார். பார்வை கடிதத்தில் நிலைத்தது.

# 3

**‘நான் மட்டும் சிறந்தவன்’ என்ற அகந்தை கொண்டு பிறரை அவமதிப்புடன் எண்ணாதீர்கள்; நடத்தாதீர்கள். அற்பமானவர்கள் என்று உலகில் யாரும் இல்லை. வீட்டைத் தூய்மைப்படுத்தும் துடைப்பம் கூட முக்கியமான பொருள்தான்.**

இன்ஸ்பெக்டர் ஷ்யாம்சுந்தர் நீலக் கண்ணனையே சில விநாடிகள் வரை உற்றுப் பார்த்துக் கொண்டு இருந்துவிட்டுக் கேட்டார்.

“நீங்க சொல்றது எதுவுமே நம்பும்படியாய் இல்லையே நீலக்கண்ணன்? உங்க மனைவி மிருணாளினி எதுக்காகத் தற்கொலை பண்ணிக்கணும்... என்ன காரணம்?”

“தெரியலை ஸார்...”

“இதையேதான் கடந்த ஒரு மணி நேரமாய் சொல்லிட்டு இருக்கீங்க. உங்க மனைவி தற்கொலை பண்ணிக்க ஒரு காரணமும் இல்லைன்னு சொல்றீங்க. அப்படி காரணம் இல்லாதபோது நாங்க இந்த கேஸை வேற ஒரு கோணத்திலிருந்துதான் பார்க்கணும். அதன்படி தான் இன்வெஸ்டிகேஷனும் பண்ணனும்...”

“வேற ஒரு கோணம்ன்னா... எப்படி ஸார்?”

“உங்க மனைவியோட மரணம் இயற்கையான மரணம் கிடையாது. உடம்பு நூறு சதவீதம் நெருப்பில் கருகி ஒரு கரிக்

கட்டையாய் மாறி இறந்து போயிருக்காங்க. ஸோ... ஒண்ணு அவங்க தற்கொலை பண்ணியிருக்கணும். இல்லைன்னா மத்தவங் களால கொலை செய்யப்பட்டு இருக்கணும். உங்களோட கருத்துப்படி மிருணாளினி தற்கொலை பண்ணிக்க எந்த ஒரு காரணமும் இல்லை. அப்படீன்னா அவங்களை யாராவது மர்டர் பண்ணியிருக்கலாமே...?"

"அதுக்கு வாய்ப்பே இல்லை ஸார்."

"வாய்ப்பே இல்லைன்னு எப்படி அவ்வளவு உறுதியாய் சொல்றீங்க?"

நீலக்கண்ணனின் விழிகளில் நீர் திரண்டு ஒரு அழுகையாய் மாறி தொண்டையை அடைத்துக் கொள்ள உடைந்த குரலில் பேசினான்.

"ஸ...ஸார்...! எனக்கும் சரி... என்னோட மனைவி மிருணாளினிக்கும் சரி... அப்பா, அம்மா கிடையாது. நானும் ஒரு அனாதை. அவளும் ஒரு அனாதை. ரெண்டு பேருமே அநாதை விடுதிகளில்தான் வளர்ந்தோம். படிச்சோம். நான் ஒரு கூரியர் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்து கலெக்ஷன் பாயாய் ஒர்க் பண்ணி கொஞ்சம் கொஞ்சமாய் முன்னுக்கு வந்து, நானும் ஒரு கூரியர் கம்பெனியை ஸ்டார்ட் பண்ணினேன். பேங்க்ல கடன் வாங்கி பிசினஸை டெவலப் பண்ணினேன். கார், பங்களான்னு எனக்கு வசதியான வாழ்க்கை கிடைச்சது. அதுக்கப் புறம் கல்யாணம் பண்ணிக்க நினைச்சேன். எனக்கு அப்பா அம்மா இல்லாத காரணத்தால நானும் ஒரு அநாதைப் பெண்ணையே கல்யாணம் பண்ணிக்க முடிவு எடுத்து ஆதரவற்ற பெண்கள் இல்லத்துக்குப் போய் எனக்கு பொருத்தமான பெண் ஒருத்தியைத் தேட ஆரம்பிச்சேன். பள்ளிக்கரணை

அநாதை விடுதியில் தையல் டீச்சராய் இருந்த மிருணாளினியை என்னோட மனசுக்குப் பிடிச்சதாலே கல்யாணம் பண்ணிக்கிட்டேன்."

"கல்யாணமாகி எவ்வளவு நாளாச்சு?"

"ஒண்ணே கால் வருஷமாச்சு ஸார்..."

"இது நாள் வரைக்கும் உங்களுக்குள்ளே பிரச்னைகள் ஏதும் வந்தது இல்லையா?"

"இல்ல... ஸார்..."

"ஒரு சின்ன உரசல் கூட...?"

"எனக்குத் தெரிஞ்சு... இல்ல ஸார்... மிருணாளினி அட்ஜஸ்ட்டபிள் டைப். எனக்கு எது பிடிக்கும், எது பிடிக்காதுன்னு குறிப்பாலேயே தெரிஞ்சுகிட்டு அதுக்கேற்ற மாதிரி நடந்துக்குவா..."

"உங்களுக்குக் கோபம் வருமா?"

"வராது..."

"ஃப்ரண்ட்ஸ். வீட்டுக்கு வர்ற பழக்கம் உண்டா?"

"எனக்கும் சரி... மிருணாளினிக்கும் சரி, ஃப்ரண்ட்ஸே கிடையாது ஸார்."

"உங்களுக்குப் பக்கத்து வீட்ல இருக்கிறவங்க... வீட்டுக்கு வருவாங்களா...?"

"ம்... வருவாங்க ஸார்... பக்கத்து வீட்ல அன்வர் பாட்சான்னு ஒருத்தர் இருக்கார். பக்ரீத், ரம்ஜான் நாட்களில் பிரியாணி கொண்டு வந்து கொடுப்பார். எதிர் வீட்ல ரிடையர்ட் ஹெட்மாஸ்டர் சோமசுந்தரம் இருக்கார். ஞாயிற்றுக்கிழமைகளில் நான் ஓய்வாய் இருக்கும்போது பேச வருவார். மற்றபடி அக்கம் பக்கத்து வீடுகளில் இருப்பவர்களைப் பார்த்து 'ஹலோ' சொல்வதோடு சரி."

"காலையில் நீங்க தூங்கி கண் விழிக்கும் போது மிருணாளினி நல்ல மூடில் இருந்தாங்களா...?"

"ஆமா ஸார்... ஜாலியான மூடில் இருந்தா... இன்னிக்கு அவளுக்கு பர்த்டே. என்னைப் பார்த்து சந்தோஷமாய் 'குட்மார்னிங் என் மணாளனே!' என்று சொன்னாள். 'பொறந்த நாளைக்கு என்ன கிஃப்ட் தரப் போறீங்க?'ன்னு கேட்டா. நான் 'குளிச்சுட்டு வந்து உனக்கு கிஃப்ட் தர்றேன்'னு சொல்லிட்டு குளிக்கப் போனேன். குளிக்கப் போகும்போதுகூட சந்தோஷமாய் இருந்தா. நான் பதினஞ்சு நிமிஷத்துக்குள்ளே குளியலை முடிச்சுட்டு வந்து பார்க்கும் போது சதை பொசுங்கின நாற்றம் வீடு பூராவும் அடிச்சது. சமையலறைக்குள் புகை. பதட்டமாய் ஓடிப் போய் கதவைத் தள்ளிப் பார்த்தேன். கதவு உள்பக்கமாய் தாழ் போட்டிருந்தது. உடனே ஒரு ஸ்டூலைப் போட்டு ஏறி வெண்டிலேட்டர் வழியாய் உள்ளே பார்த்ததும் அதிர்ந்து போயிட்டேன். நான் போட்ட சத்தத்துல அக்கம் பக்கத்து வீட்டுக்காரங்க ஓடி வந்து கதவை உடைச்சாங்க. உள்ளே போய்ப் பார்த்தபோது என்னோட மிருணாளினி கருகிப் போய் கரிக்கட்டையாய் கிடந்தா...!"

"உங்களுக்கு மிருணாளினியோட அலறல் சத்தம் கேட்கலையா?"

"கேட்கலை ஸார்."

"அது எப்படி கேட்காமல் போகும்...? உடம்பு தீப்பற்றி எரியும்போது அவங்க போடற சத்தம் கர்ண கடூரமாய் இருந்திருக்குமே?"

"அதுதான் ஸார் எனக்கும் ஆச்சர்யமாய் இருக்கு. பாத்ரூமுக்கும் சமையலறைக்கும்

இடையே உள்ள தூரம் 50 அடிதான் இருக்கும்."

"மீஸ்டர் நீலக்கண்ணன்! நான் மறுபடியும் மறுபடியும் சொல்றேன்னு நீங்க தப்பாய் நினைக்கக் கூடாது. மிருணாளினி தற்கொலை பண்ணிக்கலை. நீங்க குளிக்க உள்ளே போனதும் யாரோ வீட்டுக்குள்ளே வந்து..."

இன்ஸ்பெக்டர் ஷ்யாம் சுந்தர் பேச்சை முடிக்கவில்லை சப்-இன்ஸ்பெக்டர் நாசர் "ஸார்!" என்று அழைத்தபடி முன்னே வந்து நின்றார்.

"என்ன நாசர்...?"

"ஸார்...! மிருணாளினி தற்கொலை பண்ணிட்டுத்தான் இறந்து போயிருக் காங்க..."

"எப்படி சொல்றீங்க...?"

"மிருணாளியின் உடைகள் இருந்த வார்ட் ரோப்பை திறந்து சோதனை பண்ணிப் பார்த்தபோது ஒரு சேலையோட மடிப்புக் குள்ளே இந்த லெட்டர் இருந்தது" சொன்ன நாசர் தன் கையில் வைத்து இருந்த தாளை ஷ்யாம் சுந்தரிடம் நீட்டினார். அவர் அதை வாங்கிப் பார்த்தார்.

என் அன்பான கணவர்க்கு!


உங்கள் 'மிரு'வின் கடைசி வணக்கம்,

என் பிறந்த நாளும் இறந்த நாளும் ஒரே தேதியாக இருந்தால் நன்றாக இருக்குமே என்று ஆசைப்பட்டேன்.

அந்த ஆசையின் விளைவால்தான் நெருப்பில் ஸ்நானம் பண்ணிவிட்டேன். என்னுடைய தற்கொலைக்குப் பெரிதாக வேறு எந்த காரணமும் இல்லை. வேறொரு பெண்ணை மணந்து கொண்டு

வாழ்க்கையின் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பியுங்கள்.

இப்படிக்கு உங்கள்
**எக்ஸ் திருமதி மிரு.**



# 4

**ஒரு கேள்வியும் பதிலும்**

**கேள்வி: கடவுள் எங்கும் நிறைந்திருக் கிறார் என்று சொல்லும் ஆன்மீக வாதிகள் கோவில்களைக் கட்டுவது ஏன்?**

**பதில்: காற்று எங்கும் நிறைந்து இருப்பது உண்மைதான். இருந்தாலும் அதை உணர்வதற்கும் அனுபவிப்ப தற்கும நமக்கு மின் விசிறி தேவைப் படுகிறதே! அதுபோலத்தான் கடவுளை உணர்வதற்கும் கோவில்கள்.**

டாக்டர் ஹரிகோவிந்த் யார்க்கும் சந்தேகம் வராதபடி பேசிக் கொண்டே அந்தத் தாளில் எழுதப்பட்டு இருந்த ஆங்கில வாக்கியத்தைப் படித்தார். மனசுக்குள் தமிழாக்கம் ஓடியது.

‘உன் கையில் வைத்து இருக்கும் சி.ஏ.எம். எனப்படும் செல்லுலார் அட்ஹெசன் மெட்டீரியல் ஆய்வு ப்ராஜெக்ட் ஒரு திருட்டு மாங்காய். அந்த மாங்காயைச் சாப்பிட உனக்கு உரிமையில்லை. ஐந்து நிமிடத் திற்குள் நீ மேடையை விட்டு இறங்கி உன்னுடைய இருக்கையில் போய் உட்கார

வேண்டும். இல்லாவிட்டால் நான் மேடை ஏற வேண்டியிருக்கும்.'

இப்படிக்கு

**அந்த மாங்காய்க்குச் சொந்தக்காரன்.**

'ஹரிகோவிந்த் தான் அணிந்து இருந்த ஃபுல்சூட்டுக்குள் குபீரென்று வியர்த்தார். இருதயத்துடிப்பின் லயம் மாறியது. ஆய்வுக் கட்டுரையின் தாள்களைப் பிடித்து இருந்த கைவிரல்கள் நடுங்கின. தொண்டைப்பகுதி முழுவதும் ஈரப்பதம் காய்ந்து போக பேச வேண்டிய வார்த்தைகள் குரல் நாண்களுக்கு மத்தியிலேயே சிக்கிக் கொண்டன. டம்ளரில் இருந்த தண்ணீரை எடுத்து மடமடவென்று குடித்துவிட்டு மைக்கில் குழறினார்.

"ஸ...ஸ...ஸாரி... ஜெண்ட்டில்மென்... அ'யாம் ஃபிஸிகலி நாட் வெல்... ஸோ... ஐ கன்க்ளூட் மை வேர்ட்ஸ் வித் திஸ்."

பேசிவிட்டு தடுமாற்றமாய் மேடையை விட்டு இறங்கினார். அவருடைய உதவியாளர் சுபாஷ் வேகவேகமாய் பக்கத்தில் வந்தார். "டாக்டர்...ஆர் யூ ஆல்ரைட்?"

"நோ... ப்ராப்ளம்... அ'யாம் ஆல்ரைட்..."

"யூ ஆர் ஸ்வெட்டிங் டூ மச் டாக்டர்."

"சு...சுபாஷ்..."

"டாக்டர்...!"

"இதைப் பெரிசு பண்ணாமே என்னைக் கூட்டிகிட்டுப் போய் சீட்ல உட்காரவை."

"ஓ.கே... டாக்டர்..." உதவியாளர் சுபாஷ் டாக்டர் ஹரிகோவிந்தை அழைத்துப் போய் முன் வரிசையில் இருந்த நாற்காலியில் உட்கார வைத்தார். பக்கத்து இருக்கைகளில் இருந்த டாக்டர்கள் அவரைச் சூழ்ந்தார்கள்.

"ஹரிகோவிந்த்! டூ யூ வாண்ட் எனி மெடிக்கல் அஸிஸ்டன்ஸ்...?"

"நோ...நோ... ஐ... டோண்ட்... வாண்ட்...! ஐ ஃபீல் ஸம் கிட்டினஸ். நவ் அ'யாம் ஓ.கே... ஐ... வில் பி ரெக்கவர்ட் வித்தின் அதர் ஃபைவ் மினிட்ஸ்..."

"ஹேவ்... ஸம்...டீ ஆர் காப்பி...?"

"நோ தேங்க்ஸ்..." ஹரிகோவிந்த் இருக்கைக்கு நன்றாக சாய்ந்து உட்கார்ந்துக் கொண்டார். மனசுக்குள் இன்னமும் படபடப்பு இருந்தது. வியர்ப்பது இப்போது கொஞ்சம் நின்றிருந்தது. கடித வார்த்தைகள் இதயத்தை சாடியது.

'திருட்டு மாங்காய்!'

'அந்த மாங்காயைச் சாப்பிட உனக்கு உரிமையில்லை!'

'இந்த துண்டுக் காகிதத்தைக் கொடுத்து விட்டவன் யார்?'

மேடையில் இப்போது ஆந்திராவைச் சேர்ந்த டாக்டர் பசவப்பா, எதிர்கால பயோ ஸ்பேர் பார்ட்ஸைப் பற்றிப் பேச ஆரம்பித்து இருந்தார்.

"இனி 2025க்குள் மனிதனின் எந்த உறுப்பினை வேண்டுமானாலும் செயற்கையாகத் தயாரித்துக் கொள்ளக்கூடிய மருத்துவ விஞ்ஞானம் வளரும். ஆனால் மனித மூளையை மட்டும் செயற்கையாகத் தயாரிக்க முடியாது. அடுத்த சந்ததியினர் இயற்கை, செயற்கை என்று இரண்டு வகை மனித உறுப்புகளோடு வாழ்க்கையை நடத்துவார்கள். டெக்ஸாஸ் பல்கலைக் கழக வேதியியல் பிரிவின் ரிச்சர்ட் லாகோ என்ற டாக்டர் ஹைட்ரோ ஸைஸ்யபடைட் என்ற பொருளினால் எலும்புகளைத் தயாரித்துள்ளார். இது உயர் வெப்பத்தில் சுடப்படும் பொழுது பொரிந்து கெட்டியாகிறது. இதற்குப்

பெயர் ஹை-சை. மூளை தவிர ஏறக்குறைய எல்லா மனித உறுப்புகளுக்கும் 'ஸ்பேர் பார்ட்ஸ்' வந்துவிட்ட போதிலும் தோல் ஒரு சிக்கலாகவே இருந்து வருகிறது. மூன்று அடுக்குகளைக் கொண்ட தோலை செயற்கை யாக வளர்க்க அறிஞர்கள் பாடுபடுகின்றனர். டாக்டர் 'ஜான் ஹான்ஸ்ப்ரோ இதற்கு ஒரு வழி சொல்கிறார். ஒரு மனிதனின் தோலில் உள்ள எதிர்ப்புச் சக்தியைத் தூண்டும் மூலக்கூறினைக் கண்டுபிடித்து மரபுக் கூறு பொறியியலின் அதாவது 'Genetic Engineering' உதவியுடன் அதனை நீக்கி விட்டால் யார் வேண்டுமானாலும் தோல் தானம் செய்யலாம்."

அரங்கத்தில் இருந்த மருத்துவ மேதைகள் எல்லோரும் கைகளைத் தட்டிக் கொண்டிருக்க டாக்டர் ஹரிகோவிந்த் தன் உதவியாளர் சுபாஷை கையசைப்பால் கூப்பிட்டு பக்கத்தில் காலியாக இருந்த நாற்காலியில் உட்கார வைத்துக் கொண்டார். தலையை அவர் பக்கமாய் சாய்த்தார். குரலில் நடுக்கம்.

"சு...சு...சுபாஷ்..."

"டாக்டர்...!"

"வெளியில் எந்த விஷயம் தெரியவே கூடாது என்று இத்தனை நாட்கள் நினைத்து இருந்தோமோ அந்த நினைப்புக்கு இப்போ ஆபத்து வந்து இருக்கு சுபாஷ்..."

சுபாஷ் லேசாய் திடுக்கிட்டார்.

"என்ன டாக்டர் சொல்றீங்க...?"

"இந்தத் துண்டுக் காகிதத்தில் என்ன எழுதியிருக்குன்னு படி...!"

சுபாஷ் வாங்கிப் படித்துவிட்டு முகம் மாறினார்.

"இந்தத் துண்டுக் காகிதம் உங்க கைக்கு எப்படி வந்தது டாக்டர்...?"


"நான் மேடையில் பேசிட்டிருக்கும்போது ஒரு அட்டெண்டர் தண்ணீர் டம்ளரோடு வந்து இந்த லெட்டரை வெச்சு அதன் மேல் டம்ளரை வெச்சுட்டு எடுத்து படிக்கும்படி ஜாடை காட்டிட்டுப் போனான். எடுத்துப் படிச்சதுமே நான் ஆடிப் போயிட்டேன்."

"யார் அந்த அட்டெண்டர்?"

"தெரியலை... அதை நீதான் கண்டு பிடிக்கணும்... இந்தத் துண்டுக் காகிதத்தை அவன்கிட்டே கொடுத்தது யார்ன்னு அவனைக் கேட்டாத்தான் தெரியும்."

"அந்த அட்டெண்டர் யார்ன்னு நான் இப்பவே பார்த்துடறேன் டாக்டர்..."

"என்கொய்ரி ரகசியமாய் இருக்கட்டும்..." ஹரிகோவிந்த் சொல்லிவிட்டு இருக்கைக்கு நன்றாய் சாய்ந்து கொள்ள சுபாஷ் மேடையின் பின்பக்கத்தை நோக்கிப் போனார்.



# 5

**ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்க்கையில் அதிகமாகப் பேச வேண்டிய ஆறு வார்த்தைகள். 1. எங்கே? 2. என்ன? 3. எப்படி? 4. ஏன்? 5. எப்போது? 6. எதனால்? இந்த ஆறு வார்த்தைகளையும் எவன் ஒருவன் அதிகமாய் உபயோகிக்கிறானோ அவன் வெற்றிக்கு பக்கத்தில் சீக்கிரமாகவே போவான்.**

மிருணாளினியின் மரணத்தால் உடைந்து போயிருந்த நீலக்கண்ணன் இரண்டு வார காலத்திற்குப் பிறகு அன்றைக்குத்தான் அலுவலகம் திரும்பி யிருந்தான். அலுவலகம் பேச்சு சத்தம் இல்லாமல் மௌனமாய் இயங்கிக் கொண்டிருந்தது. தன்னுடைய அறைக்குள் நுழைந்து, ரிவால்விங் நாற்காலியில் தளர்வோடு சாய்ந்தான்.

கண்ணாடி மேஜைக்குக் கீழே அவனும் மிருணாளினியும் கல்யாண கோலத்தில் சிரிக்கும் போட்டோ பார்வைக்குக் கிடைத்தது. விழிகளில் நீர் ஊறியது.

“மிரு...! என்னை விட்டுப் போக உனக்கு எப்படி மனசு வந்தது...?’

‘பிறந்த தேதியும் இறந்த தேதியும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு யாராவது தற்கொலை செய்து கொள்வார் களா?’

‘இப்படியொரு விபரீதமான எண்ணம் உனக்கு எப்படி வந்தது...?’

“டொக்...டொக்...!”

அறைக்கதவு தட்டப்படும் சத்தம் கேட்டதும் உணர்வுக்கு மீண்டவன் “எஸ்... கம்...இன்...” என்று குரல் கொடுத்தான்.

மேனேஜர் சிவராமன் அறைக்கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தார். ‘குட்மார்னிங்’ சொல்வது சரியாக இருக்குமா என்று யோசித்து விட்டு பிறகு ‘வேண்டாம்’ என்று முடிவு செய்து “ஸார்” என்று தயக்கமாய் குரல் கொடுத்தார்.

நீலக்கண்ணன் ஒரு பெருமூச்சோடு நிமிர்ந்தான்.

"சொல்லுங்க சிவராமன்..."

"ஸார்... கடந்த ரெண்டு வாரகால ப்ராக்ரஸ் சார்ட் ரெடியாய் இருக்கு... ஒரு பார்வை பார்த்துட்டா பரவாயில்லை."

"மிஸ்டர் சிவராமன்...! இன்னும் ஒரு வாரத்துக்கு என்னை டிஸ்டர்ப் பண்ணாதீங்க.. எல்லாத்தையும் நீங்களே பார்த்துக்குங்க. நான் இப்போ எதையும் பார்க்கக்கூடிய மனநிலையில் இல்லை. ஏதாவது முக்கியமான விஷயமாய் இருந்தால் மட்டும் என்னை காண்டாக்ட் பண்ணினால் போதும்."

"எஸ்...ஸார்..."

"எனக்கு வர்ற போன்கால்ஸையும் நீங்களே அட்டெண்ட் பண்ணுங்க..."

"ஓ.கே... ஸார்..." என்றவர் தயங்கினார். பிறகு மெல்ல சொன்னார். "ஸார்...! வெற்றி வேல் முருகன்னு ஒருத்தர் உங்களைப் பார்க்க வந்து இருக்கார். நேற்றைக்கும் வந்தார். நீங்க இல்லேன்னதும் புறப்பட்டுப் போயிட்டார்."

"பேர் என்ன சொன்னீங்க?"

"வெற்றிவேல் முருகன்! சுருக்கமாக அவரை ஏ.ஏ.ஆ.ன்னு கூப்பிடுவாங்களாம். 'சாமரம்' என்கிற ஒரு அமைப்பை நடத்திட்டு வர்றாராம்."

"ஓ... அவரா...? என்ன விஷயமாய் வந்து இருக்கார்?"

"கேட்டேன் ஸார்...! அவர் ரெண்டு வாரத்துக்கு முந்தி அவரோட அமைப்பின் சார்பாய் நடைபெற்ற ஒரு கூட்டத்துக்கு உங்களை பேசக் கூப்பிட்டார்ராம். நம்ம வீட்ல துக்க காரியம் நடந்துட்டதால அந்த ஃபங்க்ஷனையே அவர் நடத்தலையாம். அது சம்பந்தமாய் உங்ககிட்டே ஏதோ பேசணுமாம்..."

“இனிமே பேச என்ன இருக்கு...?”

“அதைத்தான் நானும் சொன்னேன் ஸார். அவர் விடாப்பிடியாய் ‘ஸாரைப் பார்த்து ரெண்டு வார்த்தை பேசிட்டு போயிடறேன்’னு சொல்றார். நீங்க வேண்டாம்ன்னு சொன்னா நான் திருப்பி அனுப்பிடறன்.”

“உள்ளே அனுப்புங்க...”

மேனேஜர் சிவராமன் தலையாட்டிவிட்டு அறையை விட்டு வெளியேறிய சில விநாடிகளில் அந்த நடுத்தர வயது நபர் உள்ளே வந்தார். கதர் சட்டை, கதர் வேஷ்டி, நெற்றியின் மையத்தில் விபூதித் தீற்றல். கைகளைக் குவித்தார்.

“வணக்கம் ஸார்...”

“உட்காருங்க...”

“வெற்றிவேல் முருகன் மௌனமாய் உட்கார்ந்தார். சில விநாடிகளுக்குப் பின் பேசினார்.

“ஸாரி...ஸார்...! நீங்க உங்க மனைவியை இழந்த துக்கத்தில் இருக்கும்போது பேச வந்திருக்கேன். ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்.”

“பரவாயில்லை... நீங்க என்னை துக்கம் விசாரிக்க மட்டும் வரலைன்னு நினைக்கிறேன்.”

“எஸ்...”

“என்ன விஷயம்... சொல்லுங்க...?”

வெற்றிவேல் முருகன் சில விநாடிகள் தயங்கிவிட்டுப் பேச்சை ஆரம்பித்தார். “ஸார்! பேப்பர் நியூஸ்ல உங்க மனைவி மிருணாளினி தற்கொலை பண்ணிகிட்டதுக்கான காரணத்தைப் போட்டு இருந்தாங்க. பிறந்த தேதியும் இறந்த தேதியும் ஒரே தேதியாய் இருக்கணும்னு ஆசைப்பட்டு தற்கொலை

பண்ணிக்கிட்டதாய் லெட்டர் எழுதி வெச்சு இருந்ததாய் செய்தி. அந்த செய்தி உண்மையா?"

"உண்மைதான்...!"

"அந்த லெட்டர்ல இருந்தது உங்க மனைவியோட கையெழுத்துத்தானா?"

"சந்தேகமே இல்லை! என் மனைவியோட கையெழுத்துதான்."

"கையெழுத்து அவங்களோடதுதான்னு நீங்க இவ்வளவு தீர்க்கமாய் சொல்லும்போது நானும் நம்பறேன் ஸார். ஆனா... தற்கொலைக்கு அவங்க சொன்ன காரணம்தான் என்னோட மனசுக்கு பிடிபடலை. அந்த வார்த்தைகள்ல ஏதோ உள்ளர்த்தம் இருக்கு ஸார்."

நீலக்கண்ணனின் மனசுக்குள் எரிச்சல் சுள்ளென்று சுரந்தாலும் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் கேட்டான்.

"என்ன உள்ளர்த்தம் இருக்கும்ன்னு நினைக்கறீங்க...?"

"அது என்னான்னு எனக்குத் தோணலை ஸார். பட் அவங்களை ஏதோ ஒரு விஷயம் பாதிச்சிருக்கு. அந்தப் பாதிப்பின் வெளிப்பாடு தான் இந்தத் தற்கொலை..."

நீலக்கண்ணன் கோபமாய் நிமிர்ந்தான்.

"வெற்றிவேல் முருகன்! நீங்க எனக்கு ஆறுதல் சொல்ல வந்தீங்களா... இல்லை இந்த பிரச்னையைக் கிளறி என்னோட மன வருத்தத்தை அதிகப்படுத்த வந்தீங்களா?"

"சார்ட்டன்லி நாட் ஸார்...! நான் 'சாமரம்' என்கின்ற அமைப்பினை நடத்திட்டு வர்றேன். வாழ்க்கையில் வெறுப்பு, விரக்தி, தோல்வியிடைஞ்ச எத்தனையோ பேர்க்கு கவுன்சிலிங் கொடுத்து அவங்க வாழ்க்கையை

வெளிச்சமான பாதைக்குத் திருப்பி விட்டிருக்கேன். ஸோ நான் நிச்சயமா உங்க மன வருத்தத்தை அதிகப்படுத்த விரும்பலை. அதுக்காகவும் நான் வரலை...”


“பின்னே எதுக்காக வந்து இருக்கீங்க...?”

“ஒரு உண்மையை உங்ககிட்டே சொல்லிட்டு போலாம்ன்னு...”

“என்ன உண்மை...?”

“உங்க மனைவி மிருணாளினி எங்களோட ‘சாமரம்’ அலுவலகத்துக்கு ஒரு மாசத்துக்கு முந்தி கவுன்ஸிலிங்கிற்கு வந்துஇருக்காங்க... ‘எனக்கு இந்த உலகத்துல வாழப் பிடிக்கலை. யாரைப் பார்த்தாலும் - எதைப் பார்த்தாலும் எனக்கு வெறுப்பாய் இருக்கு’ன்னு சொல்லி அழுது புலம்பியிருக்காங்க...”

நீலக்கண்ணன் விழிகளில் அதிர்ச்சி பரவ – நிமிர்ந்து உட்கார்ந்தான்.



## ௬

***உன் நண்பனை அளவோடு நேசி! ஒரு நாள் அவன் உன் பகைவன் ஆகலாம். உன் எதிரியை அளவோடு வெறு! ஒரு நாள் அவன் உன் நண்பன் ஆகலாம்.***

***–கீதை***

**சு**பாஷ் மேடையின் பின்புறம் இருந்த கூட்ட அமைப்பாளர் வர்மாவின் அறைக்குள் நுழைந்தார்.

க்ரே வண்ணத்தில் ஃபுல் சூட் அணிந்த வழுக்கைத்தலை வர்மா செல்போனில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தார்.

"கூட்டம் முடிய எப்படியும் ஒரு மணி நேரமாகிவிடும். நோ நோ... இன்றைக்கு நீங்கள் என்னைப் பார்க்க முடியாது. நாளைக்கு நான் ஃப்ரீ. வீட்டுக்கு வந்து விடுங்கள்..."

"மார்னிங் டென்...டூ...லெவன்..." செல் போனை அணைத்த வர்மா எதிரில் நின்றிருந்த சுபாஷை ஏறிட்டார்.

"எஸ்..."

"மிஸ்டர் வர்மா...! உங்களிடம் ஒரு சிறிய க்ளாரிஃபிகேஷன்..."

"ப்ளீஸ்..."

"சிறிது நேரத்திற்கு முன்னால் டாக்டர் ஹரிகோவிந்த மேடையில் பேசிக் கொண்டு இருக்கும்போது ஒரு உதவியாளர் தண்ணீர் நிரம்பிய டம்ளரோடு டாக்டரை நோக்கிப் போனார். நீங்கள் கவனித்தீர்களா?"

"ம்... கவனித்தேன்...1"

"யார் அந்த உதவியாளர்?"

வர்மா முகம் மாறினார். "என்னைக் கேட்டால் எனக்கு என்ன தெரியும்...?"

"இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தது நீங்கள். உங்களுக்குத் தெரியாமல் இங்கே ஒரு உதவியாளர் எப்படி இருக்க முடியும்?"

"மிஸ்டர் சுபாஷ்...! நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டு பேசுகிறீர்கள். இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தது நான்தான். ஆனால் எந்த உதவியாளர்களையும் நான் நியமிக்கவில்லை. மெடிக்கல் கவுன்சிலில் இருந்து சில மருத்துவக் கல்லூரி மாணவர்கள் வாலண்ட்டரி ஒர்க் பண்ணப் போறதாய் சொன்னார்கள். அவர்களில் ஒருத்தராய்

இருக்கலாம்ன்னு நான் நினைக்கின்றேன். ஏன்... ஏதாவது பிரச்னையா?"

"ஒரு பிரச்னையும் இல்லை... டாக்டர் ஹரிகோவிந்த் முக்கியமான ப்ராஜெக்ட் ஒன்றைப் பற்றி தீவிரமாய் பேசிக் கொண்டிருந்தபோது திடீரென்று ஒரு நபர் தண்ணீர் நிரம்பிய டம்ளருடன் பக்கத்தில் போனதும் டாக்டர் என்னவோ ஏதோவென்று பயந்துவிட்டார்."

வர்மா சிரித்தார்.

"இதில் பயப்பட என்ன இருக்கிறது...? அந்த உதவியாளர் கொண்டு வந்தது வெறும் தண்ணீர்தானே? வெடிகுண்டு இல்லையே!"

"மிஸ்டர் வர்மா... பி... ஸீரியஸ்... கேலி செய்வதற்கான நேரம் இல்லை இது...! வந்த நபர் யார் என்று உங்களுக்குத் தெரியவில்லை. அவன் எப்படி மேடை ஏறினான் என்றும் தெரியவில்லை. பாதுகாப்பு ஏற்பாடுகளை இப்படி கவனக்குறைவாய் செய்யலாமா...? தண்ணீர் டம்ளரைக் கொண்டு போன அந்த நபர் கையில் துப்பாக்கியைக் கொண்டு போய் டாக்டர் ஹரிகோவிந்தை சுட்டிருந்தால் இப்போது நிலைமை எப்படி இருக்கும் என்று கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்."

"ஸாரி மிஸ்டர் சுபாஷ்...! உங்களுடைய கற்பனைக்கெல்லாம் என்னால் பதில் சொல்லிக் கொண்டு இருக்க முடியாது."

"சரி... டாக்டர் ஹரிகோவிந்துக்கு தண்ணீர் கொண்டு போய்க் கொடுத்த அந்த உதவி யாளர் யார் என்பதை எனக்குக் காட்டுங்கள். நான் அந்த நபரிடமே விசாரித்துக் கொள்கிறேன்."

"ஸாரி அகெய்ன்... மிஸ்டர் சுபாஷ்...! இந்தக் கருத்தரங்கில் காலையிலிருந்து

உதவியாளர்களாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் பல்வேறு மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள். ஷிஃப்ட் முறையில் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் எனக்குப் பரிச்சயம் கிடையாது. உங்களுக்கு வேண்டுமானால் போய் விசாரித்துக் கொள்ளுங்கள். இந்த விஷயத்தில நான் உங்களுக்கு உதவ முடியாது. இதைவிட எனக்கு வேறு பல முக்கியமான வேலைகள் உள்ளன. டாக்டர் ஹரிகோவிந்த் பேசிக் கொண்டு இருக்கும் பொழுது ஒரு உதவியாளர் தண்ணீர் கொண்டு போய்க் கொடுத்தது ஒரு சாதாரண விஷயம். அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ள முடியாது..."

"மிஸ்டர் வர்மா...! அவன் தண்ணீர் மட்டும கொண்டு போகவில்லை."

"பின்னே...?"

சுபாஷ் நிதானித்தார். 'விஷயத்தை இவரிடம் சொல்வதை டாக்டர் ஹரிகோவிந்த் விரும்பமாட்டார்...!'

"என்ன சுபாஷ்... ஏதோ சொல்ல வந்தீர்கள்?"

"ஒன்றுமில்லை... தண்ணீர் கொண்டு போனவன் ஏதாவது ஒரு ஆயுதத்தையும் கொண்டு போயிருக்கலாமோ என்று..."

"சந்தேகப்படுகிறீர்கள்...?"

"ஆமாம்..."

"தயவு செய்து இதை ஒரு பிரச்னையாய் எடுத்துக் கொண்டு பேசாதீர்கள். உங்களுக்கு அந்த உதவியாளர் யார் என்பது தெரிய வேண்டுமானால் இந்த அரங்கின் பின்புறம் ஓய்வறை ஒன்று உள்ளது. அந்த ஓய்வறை யில்தான் அவர்கள் இருக்கிறார்கள். போய் விசாரியுங்கள்..."

சுபாஷ் நகர்ந்தார்.

வர்மா குறுக்கிட்டார்.

"ஒரு நிமிஷம்..."


"என்ன...?"

"அவர்கள் உதவியாளர்களாய் இருந்தாலும் மாணவர்கள். அதிலும் மருத்துவக் கல்லூரி மாணவர்கள். எனவே மரியாதைக் குறைவாய் பேசிவிட வேண்டாம். செய்கிற விசாரணை கொஞ்சம் இதமாகவே இருக்கட்டும்."

"எனக்குத் தெரியாதா என்ன...?" சுபாஷ் ஒரு முறைப்போடு சொல்லிவிட்டு அரங்கின் பின்பக்கத்தை நோக்கி வேகமாய்ப் போனார்.

இருட்டான நடைபாதை ஒன்று வந்தது.

மெல்ல நடந்தார்.



# 7

***காதல் என்பது கரண்ட் போன நேரத்துல வர்ற கொசு மாதிரி. தூங்கவும் முடியாது. துரத்தவும் முடியாது. அதுதான் காதல்.***

"நீங்க என்ன சொல்றீங்க... வெற்றிவேல் முருகன்...? என்னோட மனைவி உங்ககிட்டே கவுன்சிலிங்குக்கு வந்தாளா...?"

"எஸ்."

"எனக்கு இந்த உலகத்துல வாழப் பிடிக்கலை'ன்னு சொன்னாளா?"

"ஆமா."

"எதைப் பார்த்தாலும் வெறுப்பாய் இருக்கு'ன்னு சொன்னாளா?"

"ஆமா."

"எப்போ வந்தா?"

"ஒரு மாசத்துக்கு முந்தி."

"நீங்க அவளுக்கு என்ன கவுன்சிலிங் பண்ணீங்க...?"

"நான் உங்க மனைவிக்கு கவுன்சிலிங் பண்ணலை. பொற்கொடின்னு ஒரு பொண்ணுதான் கவுன்சிலிங் பண்ணி யிருக்கா. எனக்குக்கூட இந்த விஷயம் தெரியாது. உங்க மனைவியின் தற்கொலை செய்தியோட போட்டோவும் பிரசுரமாகி யிருந்த பேப்பரைப் பார்த்துத்தான் பொற் கொடி என்கிட்டே சொன்னா. இதை நான் கேள்விப்பட்டதுமே உங்களைப் பார்க்க வந்துட்டேன்."

நீலக்கண்ணனின் விழிகளில் இப்போது கனமாய் கவலை பரவியிருந்தது. வெற்றிவேல் முருகனை ஏறிட்டான்.

"நீங்க சொல்றதை என்னால நம்பவே முடியலை...! மிருணாளினி என்னோடு சந்தோஷமாய்த்தான் வாழ்க்கையை நடத் திட்டு இருந்தா. தற்கொலை பண்ணிக்கப் போகிற கொஞ்ச நேரத்துக்கு முந்தி கூட ஜோக்கடிச்சு பேசிட்டு இருந்தா."

"ஸார்...! நான் ஒரு விஷயம் சொன்னா நீங்க தப்பா எடுத்துக்க மாட்டீங்களே?"

"சொல்லுங்க..."

"பெண்கள்எப்பவுமேபுதிரானவர்கள்தான். அவங்க மனசுல என்ன இருக்குன்னு கரெக்டா கெஸ் பண்றது ரொம்பவும் கஷ்டம். இன்னிக்கு இருக்கிற நிலவரப்படி 50% பெண்கள் வெளியே சிரிச்சுகிட்டும் உள்ளே அழுதுகிட்டும்தான் வாழ்க்கையை நடத் திட்டிருக்காங்க. பெரிய பெரிய பணக்கார

வீட்டுப் பெண்கள் எல்லாம் சந்தோஷமாய் இருக்கிற மாதிரி வெளியே தெரிஞ்சாலும், அவங்க எல்லோரும் மன நிம்மதியோடு இல்லை. இதுதான் உண்மை. உங்க மனைவியோட மனசுக்குள்ளேயும் ஏதோ ஒரு குறை இருந்து இருக்கு. அதை அவங்களும் உங்கக்கிட்டே சொல்லலை. உங்களாலேயும் அதைக் கண்டுபிடிக்க முடியலை."

"சரி... என்னோட ஒய்ஃபுக்கு உங்க அமைப்பைச் சேர்ந்த பொற்கொடி என்ன மாதிரியான கவுன்சிலிங்கைக் கொடுத் தாங்கன்னு சொல்ல முடியுமா?"

"ஸார்! உங்க மனைவி 'சாமரம்' அமைப்புக்கு வந்து தன்னோட பிரச்னை களைப் பேசிய போது அதை வீடியோ எடுத்து இருக்கோம். பொதுவா நாங்க வீடியோ எடுக்கிறது வர்றவங்களுக்குத் தெரியாது. அதை வெளியேயும் சொல்ல மாட்டோம். பட்... உங்க மனைவியோட விஷயம் கொஞ்சம் அப்நார்மலாய் இருக்கிறதால இதை உங்ககிட்டே சொல்றேன். நான் சி.டி. கொண்டு வந்து இருக்கேன். டி.வி.டி. ப்ளேயர் உங்ககிட்டே இருக்கா?"

"கம்ப்யூட்டர்லயே பார்த்துடலாம்."

"தென்... நோ ப்ராப்ளம்...! இந்த அறைக்கு இப்போதைக்கு யாரும் வரமாட்டாங்களே?"

"என்னோட அனுமதி இல்லாமே யாரும் வரமாட்டாங்க. அந்த சி.டி.யைக் கொடுங்க. போட்டுப் பார்த்துடலாம்."

வெற்றிவேல் முருகன் தான் கையோடு கொண்டு போயிருந்த ப்ளாஸ்டிக் பேக்கைப் பிரித்து அந்த சி.டி.யை எடுத்துக் கொடுத்த படியே சொன்னார். "உங்க மனைவி, பொற்கொடிகிட்டே பேசும்போது தன்னோட பேரை மிருணாளின்னு சொல்லாமே

'அருணா'ன்னு சொல்லி, பாண்டிச்சேரி யிலிருந்து வர்றதா சொல்லியிருக்காங்க. அவங்க சொன்னதுல எது பொய் எது நிஜம்ன்னு நீங்க சி.டி.யைப் பார்த்துட்டு சொன்னாத்தான் எங்களுக்குத் தெரியும்..."

நீலக்கண்ணன் சி.டி,யை வாங்கி தன்னுடைய மேஜை மேல் இருந்த கம்ப்யூட்டர்க்குக் கொடுக்க மானிட்டரில் ஒளிப்புள்ளிகள் உற்பத்தியாகி, சட்டென்று ஒரு அறை பார்வைக்குக் கிடைத்தது.

மிருணாளினி ஒரு சோபாவில் சற்று பதட்டத்தோடு உட்கார்ந்திருக்க எதிரில் ஒரு பெண் உறுத்தாத மேக்கப்பில் அழகாகத் தெரிந்தாள். வெற்றிவேல் முருகன் சொன்னார்.

"ஸார்! ஷீ... ஈஸ் பொற்கொடி!"

நீலக்கண்ணன் மானிட்டரில் தெரிந்த மிருணாளினியையே இமைக்காமல் பார்த்தான். அவள் பொற்கொடியிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"நான் பர்சனலா கொஞ்சம் பேசணும்."

பொற்கொடி சிரித்தாள். "தாராளமாய் பேசலாம். எவ்வளவு நேரம் வேணும்ன்னாலும் பேசலாம். உங்க பேர் என்ன?"

"அருணாதேவி... பட்... என்னை எல்லோரும் அருணான்னு கூப்பிடுவாங்க..."

"சொந்த ஊர்?"

"பாண்டிச்சேரி...! எனக்குக் கல்யாணமாகி ரெண்டு வருஷமாச்சு. ஹஸ்பெண்டுக்கு சிங்கப்பூர்ல பிசினஸ். ஜுவல்லரி அண்ட் ஃபைனான்ஸ்...!"

"உங்களுக்கு குழந்தை...?"

"இல்லை..."

"சரி... உங்களுக்கு என்ன பிரச்னை?"

“எனக்கு வாய்ச்ச கணவர் ரொம்பவும் நல்லவர். என்மேல் பிரியத்தைக் கொட்டி கண்ணுக்கு கண்ணாய் என்னைப் பார்த்துக் கிறார். இருந்தாலும் எனக்கு சந்தோஷம் இல்லை.”

“ஏன்...?”

“என் மனசுக்குள்ளே சில வேண்டாத எண்ணங்கள். நான் சந்தோஷமாய் இருக்கலாம்ன்னு நினைக்கும்போது அந்த எண்ணங்கள் என் முன்னாடி விஸ்வரூபம் எடுத்து நிற்கும். அடுத்த நிமிஷமே என் சந்தோஷம் காணாமே போயிடும். இந்த மாதிரியான ஒரு சித்ரவதையை நான் ரொம்ப நாளாவே அனுபவிச்சிட்டு வர்றேன்.”

“வேண்டாத எண்ணங்கள்ன்னா... எது மாதிரியான எண்ணங்கள்...?”

“அதை என்னாலே வெளியே சொல்ல முடியாது. நான் இங்கே வந்ததற்குக் காரணம் என் மனசுக்குள்ளே இருக்கிற வேண்டாத எண்ணங்களை விரட்டியடிக்க ஏதாவது பயிற்சிகள் இருக்கான்னு தெரிஞ்சுட்டுப் போகத்தான்...”

“ஓ.கே... அருணா...! உங்க மனசுக்குள்ளே இருக்கிற வேண்டாத எண்ணங்கள் எது எது என்கிற பட்டியல் எனக்கு வேண்டாம். உங்களுக்கு விருப்பம் இல்லாத பட்சத்தில் அதைச் சொல்ல வேண்டாம். பொதுவாவே மனசு ஒரு குப்பைக் கூடை மாதிரி. அதுல நல்ல எண்ணங்களும் இருக்கும். கெட்ட எண்ணங்களும் இருக்கும். முறையான ஒரு மனப் பயிற்சியை எடுத்துக்கிட்டா கண்டிப் பாய் மனசுக்குள்ளே இருக்கிற குப்பை எண்ணங்களை விரட்ட முடியும். அதுக்கு முன்னாடி நான் கேட்கிற சில மனோதத்துவ ரீதியான கேள்விகளுக்கு நீங்க பதில்

சொல்லணும். சில கேள்விகள் சிறுபிள்ளைத் தனமாய் இருக்கும். கோபப்படக் கூடாது. கேள்விகளைக் கேட்கட்டுமா...?"

"ம்..."

"உங்களுக்குப் பிடிச்ச நிறம் எது...?"

"வெளிர் பச்சை..."

"கோயிலுக்குப் போவீங்களா?"

"எப்போதாவது..."

"உங்களுடையது காதல் கல்யாணமா... இல்லை... அட்ரேன்ஜ்டா?"

"அரேன்ஜ்ட்..."

"காதலைப் பற்றி என்ன நினைக்கிறீங்க?"

"பசி, தாகம் மாதிரி அது ஒரு பயலாஜிகல் ஃபீலிங்."

"உங்களுக்குக் கோபமே வராதுன்னு என்னோட மனசுக்குத் தோணுது. நான் நினைச்சது சரியா?"

"ரொம்பச் சரி..."

"உங்க கணவர்க்குக் கோபம் வருமா...?"

"வரும். ஆனால் அவரோட கோபத்துல நியாயம் இருக்கும்..."

"டி.வி.யில்எதுமாதிரியானநிகழ்ச்சிகளைப் பார்ப்பீங்க...?"

"ரியாலிடி ஷோ மாதிரியான ப்ரோக்ராம்ஸ் பிடிக்கும்..."

"சீரியல்ஸ்...?"

"தவறிப்போய்கூட பார்க்க மாட்டேன்."

"சினிமா?"

"பிடிக்காது."

"பத்திரிக்கைகள் வாசிப்பீங்களா?"

"ம்... வாசிப்பேன்."

"உங்க கணவர்க்கு வெளிநாட்ல பிசினஸ்ன்னு சொன்னீங்க. அவர் வெளி நாட்லயே இருப்பாரா...?"

"இல்லை. வாரத்துக்கு ஒரு தடவை வந்துட்டுப் போவார்."

"உங்க கணவர் பெண்கள் விஷயத்தில் எப்படி...?"

"எனக்கு அவர் துரோகம் பண்ணமாட்டார். ஹி ஈஸ் ஏ ஜெம்..."

"உங்களுக்குள்ளே சண்டையே வந்தது இல்லையா?"

"வந்தது இல்லை..."

"ஸோ... உங்க திருமண வாழ்க்கை ரொம்பவும் சந்தோஷமாய் இருக்கு...?"

"ஹண்ட்ரண்ட் பர்ஸண்ட்."

"சரி! உங்க மனசுக்குள்ளே சில வேண்டாத எண்ணங்கள் வர்றதாய் சொன்னீங்க. அதுல ஏதாவது ஒரு எண்ணத்தைப் பத்தி சொல்ல முடியுமா...?"

"ஸாரி... அது பர்சனல்ன்னு நான் முதலிலேயே சொல்லிட்டேன். அந்த எண்ணங்களை விரட்ட ஏதாவது மனப்பயிற்சி இருந்தால் அதை எனக்கு சொல்லிக் கொடுத்தா போதும்..."

"மெடிடேஷன் செய்கிற பழக்கம் இருக்கா?"

"இல்லை."

"எப்பவாவது செஞ்சு இருக்கீங்களா?"

"இல்லை."

"இனிமே நீங்க மெடிடேஷன் பண்ணணும். அதை இன்னிக்கே இப்பவே ஸ்டார்ட் பண்ணுவோம்."

"மெடிடேஷன் பண்ணினா என்னோட பிரச்னை சரியாயிடுமா?"

"உடனே சரியாகாது...! இது பயிற்சியோட முதல் கட்டம். போகப் போக மனவளப் பயிற்சிகள் சிலவற்றையும் பண்ண வேண்டி யிருக்கும்..."

"இதுக்கு ஃபீஸ் ஏதாவது உண்டா?"

"நீங்கள் குணமாகிப் போகும் போது எங்களுக்கு நீங்க சொல்ற 'நன்றி' என்கிற வார்த்தைகள் தான் ஃபீஸ். முழுக்க முழுக்க இது ஒரு இலவச சேவை. ஏழை பணக்காரர் என்கிற வித்தியாசமே

இங்கு கிடையாது..."

சி.டி. அதோடு முடிந்து போய்விட, கம்ப்யூட்டரின் மானிட்டரில் இப்போது ஒளிப்புள்ளிகள்.

வெற்றிவேல்முருகன் நீலக்கண்ணனிடம் திரும்பினார்.

"பார்த்தீங்களா ஸார்...?"

"எனக்கும் மிருணாளினிக்கும் கல்யாண மாகி ஒண்ணே கால் வருஷமாச்சு... இப்படி யொரு பிரச்னை அவளுக்கு இருக்குன்னு என்னால கண்டுபிடிக்க முடியலை. அவள் ஒரு நாளாவது கவலையாய் இருந்து பார்த்ததேயில்லை."

"நோ ஸார்... நீங்க உங்க மனைவியை சரியானபடி ஜட்ஜ் பண்ணாமே விட்டுட்டீங்கன்னு நினைக்கிறேன். அவங்க தற்கொலை பண்ணிக்கிட்டதுக்கு ஏதோ ஒரு சரியான காரணம் இருக்கு. அது என்னான்னு கண்டுபிடிக்க நீங்க முயற்சி எடுக்கணும். போலீஸுக்கு போய் நீங்க கம்ப்ளைண்ட் கொடுத்தாலும்கூடத் தப்பில்லை."

நீலக்கண்ணன் யோசனையாய் தலை யாட்டினான்.

"இந்த காஸட்டை நான் வெச்சுக்கலாமா?"

"தாராளமாய்..." சொன்ன வெற்றிவேல் முருகன் எழுந்து கொண்டார். "நான் வர்றேன் ஸார்..."

அவர் விடைபெற்றுக் கொண்டு போனதும் இரண்டு நிமிடங்கள் வரை மௌனமாய் உட்கார்ந்து இருந்த நீலக்கண்ணன் பின் தன் செல்போனை எடுத்து சில எண்களைத் தட்டி விட்டு காதுக்கு ஒற்றினான். ரிங் டோன் போய் ஒரு பெண்ணின் குரல் கேட்டது.

"என்ன நீல்...?"

"சாதனா...! நீ இப்ப ஃப்ரீயா...?"

"ஏன்... ஏதாவது முக்கிய விஷயமா...?"

"ஆமா..."


"அப்படின்னா... நான் ஃப்ரீதான்..."

"எங்கே பார்க்கலாம்...?"

"நீங்க எந்த இடத்தை சொல்றீங்களோ... அங்கே.."

"சில்க் நைட்' ரெஸ்டாரண்ட்...! இன்னும் அரைமணி நேரத்துக்குள்ளே நான் அங்கே இருப்பேன்."

"நானும் இருப்பேன்."



# 8

**நூலகத்தில் இருக்கும் புத்தகம் போல் அமைதியாய் இரு! அப்போதுதான் அனைவரும் உன்னைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புவார்கள்!**

**சு**பாஷ் அந்த இருட்டான நடைபாதையில் மெல்ல நடைபோட்டு அரங்கத்தின்

பின்பக்கம் இருந்த அறையை நோக்கிப் போனார்..

சி.எஃப். எல். விளக்கு வெளிச்சத்தில் நான்கைந்து உதவியாளர்கள் உட்கார்ந்து கைகளில் கோக் பாட்டில்களை வைத்துக் கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள்.

சுபாஷைப் பார்த்ததும் பேச்சை நிறுத்தி விட்டு எழுந்தார்கள். பக்கத்தில் வந்தார்கள்.

"ஸார்..."

"டாக்டர் ஹரிகோவிந்த் மேடையில் பேசிட்டு இருக்கும்போது தண்ணீர் டம்ள ரோடு துண்டுப் பேப்பரைக் கொண்டு போய் கொடுத்தது யாரு?"

சுபாஷ் கேட்க அவர்களிடையே? மௌனம்.

"சொல்லுங்கள்... உங்களில் யார்?"

"நாங்கள் இல்லை..."

"நீங்கள் இல்லையென்றால் வேறு யார்?"

"ஸார்... இங்கே நிறைய பேர் 'வாலண்ட்டியர்ஸ்'களாகப் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். அதில் பாதி பேர் சிறிது நேரத்திற்கு முன்புதான் புறப்பட்டுப் போனார்கள். நீங்கள் சொல்கிற நபர், புறப் பட்டுப் போன அந்த நபர்களில் ஒருத்தராய் இருக்கலாம்."

"அந்த நபரை உங்களால் அடையாளம் தெரிந்து கொள்ள முடியுமா?"

"ஸாரி... ஸார்... வாலண்ட்டியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்த் இளைஞர்கள் எல்லோருமே இருபத்தைந்து வயதுக்கு உட்பட்டவர்கள். எல்லோர்க்கும் ஒரே மாதிரியான யூனிஃபார்ம். மிக நெருக்கமான நண்பர்களையே கூட எங்களால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை..."

"ஸோ... அந்த நபர் யார் என்று உண்மையிலேயே உங்களுக்குத் தெரியாது?"

"தெரியாது ஸார்..." தீர்க்கமாய் அவர்கள் சொல்லிவிட, இனி மேற்கொண்டு இதைப் பற்றிப் பேசுவதில் எந்த பயனும் இல்லை என்பதை உணர்ந்து கொண்ட சுபாஷ் அந்த இடத்தைவிட்டு அகன்று வேகவேகமாய் அரங்கை நோக்கி வந்தார்.

அரங்கத்தில் நுழைந்து, ஹரிகோவிந்த் உட்கார்ந்திருந்த இருக்கைக்குப் பக்கத்தில் வந்ததும் திகைத்தார்.

ஹிரிகோவிந்த் உட்கார்ந்து இருந்த இடம் வெறுமையாய் இருந்தது.

பக்கத்து இருக்கையில் உட்கார்ந்து செமினார் நடவடிக்கைகளை உன்னிப்பாய் கவனித்துக் கொண்டிருந்த அந்த டாக்டரிடம் சுபாஷ் குனிந்து மெல்லிய குரலில் கேட்டார்.

"மன்னிக்கவேண்டும். இந்த இருக்கையில் உட்கார்ந்திருந்த டாக்டர் ஹரிகோவிந்த் எங்கே?"

"அவர் கிளம்பிப் போய்விட்டாரே!"

"எங்கே...?"

"எனக்குத் தெரியாது. யாரோ ஒரு நபர் பக்கத்தில் வந்தார். ஏதோ பேசினார். டாக்டர் ஹரிகோவிந்த் எழுந்து அவருடன் புறப்பட்டுப் போய்விட்டார்."


"யார் அந்த நபர்...?"

"எனக்குத் தெரியாது. நான் அந்த நபரின் முகத்தை சரியாக கவனிக்கவில்லை."

சுபாஷ் திகைத்துப் போனவராய் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டுத் தன் செல்போன் எண்களை அழுத்தினார். மறுமுனையில் ரிங் டோன் போவதற்குப் பதிலாக ரெக்கார்ட் வாய்ஸ் கேட்டது.

தி சப்ஸிகிரைபர் யுவர் காலிங் இஸ் சுவிட்ச் ஆஃப்.

சுபாஷின் மனதுக்குள் பயம் பரவி உடம்பை அந்த ஏ.சி. அரங்கிலும் வியர்க்க வைத்தது.



# 9

***'புன்னகை' என்பது ஒரு வார்த்தை அல்ல.. அது ஒரு அழகான, நீளமான வாக்கியம். பெரிய பெரிய பிரச்னைகளையெல்லாம் ஒரு புன்னகை புரிவதின் மூலம் தீர்த்துக் கொள்ள முடியும். Smile is The Best Answer for all Problems. புன்னகைக்கக் கற்றுக் கொள்ளுங்கள். போர்க்களங்கள் பூங்காவனங்களாக மாறுகின்ற அதிசயத்தைப் பார்ப்பீர்கள்.***

வெற்றிவேல் முருகன் தன் அலுவலக அறையில் உட்கார்ந்து அன்றைய நாளிதழைப் புரட்டியபடியே கண்ணாடி டம்ளரில் இருந்த ஜூஸை ஸ்ட்ராவால் உறிஞ்சிக் கொண்டிருந்த போது இண்டர்காம் கூப்பிட்டது.

ரிஸிவரை எடுத்தார்.

டெலிபோன் ஆபரேட் பணியில் இருந்த யாமினி பேசினாள். "ஸார்... ஒரு வயசான நபரும், ஒரு அம்மாவும் உங்களைப் பார்க்க வந்து இருக்காங்க..."

"என்ன விஷயம்ன்னு கேட்டியா?"

"கேட்டேன் ஸார்... ரெண்டு மாசத்துக்கு முந்தி நம்ம 'சாமரம்' அமைப்புக்கு வந்து

கவுன்ஸிலிங் எடுத்துக்கிட்ட காஞ்சனா என்கிற பெண் தற்கொலை எண்ணத்திலிருந்து மாறி இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பிட்டாங்களாம். அதுக்காக நன்றி சொல்ல வந்து இருக்காங்களாம்."

"வரச்சொல்லு...!"

வெற்றிவேல் முருகன் ரிஸீவரை வைத்து விட்டு மீதம் இருந்த ஜூஸை வயிற்றுக்குக் கொடுத்து டம்ளரைக் காலியாக்கி பேப்பரை மடித்து வைத்தார்.

அந்த வயதான தம்பதிகள் உள்ளே நுழைந்தார்கள். கையில் ஒரு கேரி பேக். அதற்குள் ஒரு பூமாலை. ஆப்பிள், சாத்துக்குடி என்ற பழவகைகள். வெற்றிவேல் முருகன் கைகளைக் குவித்தார்.

"வணக்கம்... வாங்க..."

பெரியவரும் கைகளைக் குவித்தார். "அய்யா! எங்களை உங்களுக்குத் தெரியுதா?"

"தெரியாமே என்ன...? நீங்க காஞ்சனாவோட பேரண்ட்ஸ்தானே?"

"சரியா சொல்லிட்டீங்கய்யா...!"

"உங்க பொண்ணு காஞ்சனா எப்படி யிருக்கா?-"

"அய்யா...! எங்க பொண்ணு காஞ்சனா தன்னுடைய பழைய இயல்பான நிலைமைக்குத் திரும்பிட்டா. தனக்குக் கல்யாணமாகலையே என்கிற விரக்தி மனப்பான்மையில் தற்கொலைக்கு முயற்சி பண்ணின அவள் இப்போ அந்த 'ஸ்ட்ரஸ்' மனப்பான்மையிலிருந்து மீண்டுட்டா. பழையபடி உற்சாகமாய் வேலைக்குப் போக ஆரம்பிச்சுட்டா. அவளோட மனமாற்றத்துக்குக் காரணம் உங்க 'சாமரம்' அமைப்பு கொடுத்த கவுன்ஸிலிங்தான்."

வெற்றிவேல் முருகன் மலர்ந்தார்.

"அப்படியா...! கேட்கவே ரொம்பவும் சந்தோஷமாய் இருக்கு."

"அதைவிட ஒரு சந்தோஷமான விஷயம். காஞ்சனாவுக்கு ஒரு நல்ல இடத்திலிருந்து வரன் வந்தது. பையன் சாஃப்ட்வேர் என்ஜினியர். பெங்களூரில் இருக்கற 'இன்போசிஸ்' கம்பெனியில் வேலை. அடுத்த மாதம் 14 ஆம் தேதி கல்யாணத்தை ஃபிக்ஸ் பண்ணியிருக்கோம். பத்திரிகை அப்புறமாய் கொண்டு வர்றன்..." சொல்லிக் கொண்டே அந்தப் பெரியவர் கேரிபேக்கிலிருந்து அந்த பூமாலையை எடுத்தார். "எங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னு தெரியலை. ஏதோ எங்களால முடிஞ்ச மரியாதை. இந்த மாலையை ஏத்துக்கணும்."

வெற்றிவேல் முருகன் சிரித்தார்.

"இதெல்லாம் எதுக்குங்க...! சும்மா ஒரு வார்த்தை 'நன்றி'ன்னு சொன்னாலே போதுமே..."

"எங்களோட சந்தோஷத்துக்காக...

"அப்படீன்னா... இந்த மாலையை நீங்க எனக்குப் போடக் கூடாது."

"பின்னே....?"

"உங்க டாட்டர் காஞ்சனாவுக்கு இங்கே கவுன்சிலிங் பண்ணின பொண்ணுக்குப் போடணும்."

"கவுன்சிலிங் பண்ணின பொண்ணு யாரு...?"

"அந்தப் பொண்ணோட பேரு ரஞ்சிதம்."

"ரஞ்சிதத்தைக் கூப்பிடறேன்... அந்தப் பொணணுக்கு இந்த மாலையைப் போட்டு சந்தோஷப்படுத்தி நன்றி சொல்லுங்க.

அதுதான் பொருத்தமாய் இருக்கும்." சொன்ன வெற்றிவேல் முருகன் இண்ட்டர்காம் ரிஸீவரை எடுத்துக் கொண்டு ஒரு பட்டனைத் தட்டி ரஞ்சிதத்தை தொடர்பு கொண்டு அவளை வரவழைத்தார்.

"ரஞ்சிதம்! இவங்க காஞ்சனாவோட ஃபாதர் மதர். காஞ்சனா இப்போ பழைய நிலைமைக்கு திரும்பிட்டதால ரொம்பவும் சந்தோஷமான மனநிலையில் வந்து இருக்காங்க... உனக்கு மாலை போட்டு மரியாதை பண்ணனும்ன்னு நினைக்கிறாங்க."

"இதெல்லாம் எதுக்கு ஸார்?"

"அவங்க சந்தோஷப்படறாங்க... அக்செப்ட் பண்ணிக்கோம்மா!" ரஞ்சிதம் அவர்களுக்குப் பக்கத்தில் வர அந்த அம்மாள் மாலையை எடுத்து ரஞ்சிதத்தின் கழுத்தில் போட்டாள். "நீ மகராசியாய் இருக்கணும்மா...!"

"இந்த ஃப்ரூட்ஸும் உனக்குத்தாம்மா...! வாங்கிக்கோ!" பெரியவர் பழங்கள் நிறைந்த கேரி பேக்கை எடுத்து நீட்ட ரஞ்சிதம் வாங்கிக் கொள்ளாமல் அப்படியே நின்றாள்.

"என்னம்மா.... தயக்கம்...?"

ரஞ்சிதம் அசையாமல் அவர்களைப் பார்த்தபடி நின்றாள். வெற்றிவேல் முருகன் லேசாய் எரிச்சல்பட்டார்.

"ரஞ்சிதம்...! உன்னைத்தாம்மா...! அவங்க ஃப்ரூட்ஸ்தானே தர்றாங்க... அதை வாங்கிக்க இவ்வளவு பிகு பண்றியே... வாங்கிக் கோம்மா!"

ரஞ்சிதம் வெற்றிவேல் முருகனின் பேச்சை லட்சியப்படுத்தாமல் அப்படியே நிற்க, அந்த அம்மாள் ரஞ்சிதத்தின் தோள் மீது கையை வைத்தாள். "இதோ பாரம்மா...! இருட்டான பாதையில் நடை போட்டுக்கிட்டு

இருந்த என்னோட மகளை வெளிச்சப் பாதைக்குக் கொண்டு வந்தவள் நீ. ஏதோ எங்க பிரியத்துக்காக... இந்தப் பழங்களை..."


அந்த அம்மாள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ரஞ்சிதம் மெல்ல அசைந்து ஒரு அறுந்த தோரணம் போல் சரிந்து தரையில் சாய்ந்தாள்.

அதிர்ந்து போன வெற்றிவேல்முருகன் பதட்டமாய்க் குனிந்தார்.

"ர...ர...ர...ரஞ்சிதம், உனக்கு என்னாச்சு?"

குரல் கொடுத்துக் கொண்டே அவள் கன்னத்தைத் மெல்லத் தட்டினார்.

அவளுடைய மூக்குத் துவாரங்களிலும், கடைவாயிலும் ரத்தம் கொப்பளித்து சிவப்புக் கோடுகளாய் வழிந்தது.



## 10

**நீ மற்றவர்களை வணங்க ஆரம்பிக்கும் போதே வளர ஆரம்பித்து விடுகிறாய்.**

'டாக்டர் ஹரிகோவிந்த் திடீரென்று கிளம்பி எங்கே போனார்?'

சுபாஷ் குழப்பமாய் யோசித்து திகைத்துத் திணறிக் கொண்டு இருக்கும்போதே வர்மா மெல்ல பக்கத்தில் வந்து நின்றார்.

"டாக்டரைத் தேடுகிறீர்களா மிஸ்டர் சுபாஷ்?"

"ஆமாம்..."

"அவர் தான் தங்கியிருக்கும் ஹோட்டல் அறைக்கு கிளம்பிப் போய்விட்டார்."

"என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் எங்கேயும் போகமாட்டாரே...?"

"அவர் புறப்பட்டு போகும்போது நான் அவரைப் பார்த்தேன். என்னிடம் பேசினார். 'நான் அவசரமாய் ஹோட்டல் அறைக்குப் போய்க் கொண்டு இருக்கிறேன். என் உதவியாளர் சுபாஷ் வந்தால் சொல்லி விடுங்கள்' என்று என்னிடம் சொன்னார். நீங்கள் அப்போது அரங்கத்தின் பின் பக்கத்தில் இருந்தீர்கள்..."

"டாக்டரை யாரோ வந்து கூட்டிக் கொண்டு போனதாக பக்கத்து இருக்கையில் உட்கார்ந்து இருந்தவர் என்னிடம் சொன்னார். யார் அந்த நபர்...?"

"ஸாரி... எனக்கு அதைப்பற்றித் தெரியாது! நீங்கள் அவரைப் பார்க்க வேண்டுமானால் உடனடியாக ஹோட்டல் அறைக்குப் போங்கள்...!"

"மிஸ்டர் வர்மா...! நீங்கள் கொடுத்த தகவலுக்கு நன்றி. ஆனால் நான் டாக்டர் ஹரிகோவிந்தின் செல்போனைத் தொடர்பு கொண்டபோது அது ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டு இருப்பதாக ரிக்கார்ட்டட் வாய்ஸ் கேட்டது. அவர் ஏன் தன்னோட செல்போனை ஸ்விட்ச் ஆஃபில் வைத்து இருக்க வேண்டும்?"

"இந்தக்கேள்வியை நீங்கள் அவரிடம்தான் கேட்க வேண்டும்... பை...த...பை... அரங்க மேடைக்குப் பின்புறம் இருக்கும் உதவியாளர்களைப் பார்க்கச் சென்றீர்களே. ஏதாவது பயனுள்ள தகவல் கிடைத்ததா?"

"இல்லை...! டாக்டர் ஹரிகோவிந்திற்கு துண்டுக்கடிதம் கொடுத்த அந்த நபர் யார் என்பது தெரியவில்லை. வாலண்ட்டியர்ஸ் பாதி பேர் கிளம்பிப் போய்விட்டதாக அங்கிருந்த சிலர் சொன்னார்கள்."

வர்மா சிரித்தார். "நான் முன்பு என்ன சொன்னேனோ அதைத்தான் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள்... ஓ.கே. மிஸ்டர் சுபாஷ்...! நீங்கள் புறப்படுங்கள். டாக்டர் ஹரிகோவிந்த் உங்களுக்காக ஹோட்டல் அறையில் காத்துக் கொண்டு இருக்கலாம்..." சொல்லிவிட்டு அவர் நகர்ந்துவிட சுபாஷ் புயலாய் நடைபோட்டு அரங்கை விட்டு வெளியே வந்தார். கார் பார்க்கிங்கில் நின்றிருந்த தன்னுடைய காரை எடுத்துக் கொண்டு டெல்லியின் போக்குவரத்தில் கலந்தார். அந்த முன்னிரவு நேரத்தில் டெல்லியின் போக்குவரத்து சற்று மிதமாய் இருந்ததால் காரை வேகமாய் விரட்டிக் கொண்டு வந்த கன்னாட்ப்ளேஸில் இருக்கும் மௌரியா இண்ட்டர்நேஷனல் ஹோட்டலுக்கு இருபது நிமிடத்தில் வந்து சேர்ந்தார்.

ஹோட்டலின் கார் பார்க்கிங்கில் காரை நிறுத்திவிட்டு ரிசப்ஷனை நோக்கிப் போனார். வெளிச்சத்தில் ஒரு மெழுகு பொம்மையைப் போல் நின்றிருந்த வரவேற்பு பெண்ணிடம் கேட்டார்.

"டாக்டர் ஹரிகோவிந்த் தன்னுடைய அறைக்குத் திரும்பிவிட்டாரா...?"

"பத்து நிமிடங்களுக்கு முன்புதான் வந்தார். இப்போது அறையில் இருக்கிறார்."

சுபாஷ் அவளுக்கு அவசரகதியில் ஒரு நன்றியை உதிர்த்துவிட்டு லிஃப்ட்டை நோக்கி வேகமாய்ப் போனார். காலியாய் இருந்த லிஃப்டில் பயணித்து ஐந்தாவது மாடியில் வெளிப்பட்டு டாக்டர் ஹரிகோவிந்த் தங்கியிருந்த 595 அறைக்கு முன்பாய் நின்று அழைப்பு மணியை அழுத்தினார்.

சரியாய் முப்பது விநாடிகள் கரைந்த பிறகு-

அறைக்கதவு மெல்லத் திறந்தது.

டாக்டர் ஹரிகோவிந்த் நைட் கவுன் தரித்து தெரிந்தார். சுபாஷைப் பார்த்ததும் "ஸாரி சுபாஷ்... உன்னிடம் சொல்லிக் கொள்ள எனக்கு அவகாசம் இல்லை... அதனால் புறப்பட்டு வந்துவிட்டேன்...!"

"எனக்கு போன் செய்து சொல்லியிருக்க லாமே டாக்டர்?"

"சூழ்நிலை ஒத்துவரவில்லை."

"உங்களோடு வந்த நபர் யார்?"

"முதலில் உள்ளே வா சுபாஷ்...! உன்னிடம் நிறைய விஷயங்கள் சொல்ல வேண்டி யிருக்கிறது."

சுபாஷ் அறைக்குள் நுழைந்தார். ஹரி கோவிந்த் கட்டிலில் போய் உட்கார்ந்தார். எதிரேயிருந்த டீபாயில் ஷீவாஸ் ராயல் விஸ்கி நிரம்பிய குடுவை பாட்டில் ஒன்று புத்தம் புதிதாய் தெரிந்தது.

"சுபாஷ்... எனக்கு மனம் சரியில்லை. அதனால் தான் ந்த லிக்கர் கன்ஸ்யூம்... எனக்கு ஒரு ஸ்மால் போதும். நீ சாப்பிடு."

சுபாஷ் அந்த பாட்டிலை எடுத்து ஓப்பன் செய்து இரண்டு டம்ளர்களில் ஊற்றி சோடாவைக் கலந்து ஐஸ் துண்டங்களை எடுத்துப் போட்டு ஒரு டம்ளரை எடுத்து டாக்டரிடம் கொடுத்துக் கொண்டே கேட்டார்.

"சொல்லுங்க... என்ன பிரச்னை...? அரங்கத்திலிருந்து உங்களை இங்கே கூட்டிக் கொண்டு வந்த நபர் யார்?"

"அவர் பெயர் தியோடர்... இங்கே டெல்லியில் உள்ள விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்தில் பணிபுரிகிறார். என்னுடைய ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கு குறிப்புகள் எடுத்துக் கொடுத்து பெரிதும் உதவியாய் இருப்பவர்..."

சுபாஷ் வியப்புக் காட்டினார். "அவரைப் பற்றி நீங்கள் என்னிடம் சொன்னதே இல்லையே!"

"என்னுடைய ஆராய்ச்சிகளுக்கு அவர் உதவி செய்வதால் அவரைப் பற்றி வெளியே யாரிடமும் சொல்லக்கூடாது என்பது அவருடைய வேண்டுகோள்...!" ஹரி கோவிந்த் சொல்லிக் கொண்டே பனிக் கட்டிகள் மிதக்கும் ஸ்காட்ச் நிரம்பிய டம்ளரை எடுத்துக் கொண்டார். சுபாஷும் டம்ளரை எடுத்து உதட்டுக்குக் கொடுத்து ஒரு வாய் விழுங்கினார். பிறகு கேட்டார். "அந்த தியோடர் உங்களிடம் வந்து என்ன சொன்னார் டாக்டர்...?"

"நான்.. மேடையில் பேசிக் கொண்டு இருக்கும்போது தண்ணீர் டம்ளரோடு எனக்கு ஒருவன் துண்டுச் சீட்டைக் கொண்டு வந்து கொடுத்தானே... அந்த நபர் யார் என்பதைக் கண்டுபிடித்துவிட்டார் தியோடர். அதைப் பற்றி என்னிடம் வந்து சொன்னார். மேற்கொண்டு அந்த அரங்கில் இருப்பது ஆபத்து என்றும் சொன்னார். அதனால்தான் நான் உடனே புறப்பட்டேன். அரங்கத்துக்கு வெளியே வராந்தாவில் செமினார் அமைப்பாளர் வர்மாவைப் பார்த்தேன். நான் ஹோட்டல் அறைக்குச் செல்வதாக அவரிடம் சொல்லிவிட்டு வந்தேன்."

"டாக்டர்! உங்களுக்கு துண்டுச்சீட்டைக் கொண்டு வந்து கொடுத்த நபர் யார் என்பதை தியோடர் கண்டுபிடித்துவிட்டாரா?"

"ம்... கண்டுபிடித்துவிட்டார்."

"யார்... அந்த நபர்...?"

"அந்த நபரின் பெயர் சுனில் சர்மா. வேலை வெட்டி இல்லாத இளைஞன். என்னை பயமுறுத்துவதற்காக யாரோ ஒரு துண்டுச்

சீட்டை அவனிடம் கொடுத்து என்னிடம் அனுப்பி வைத்து இருக்கிறார்கள்."

"அந்த சுனில் வர்மா, தியோடரிடம் பிடிபட்டு விட்டானா?"

"தியோடரிடம் பிடிபடவில்லை..."

"பின்னே...?"

"எமனிடம் பிடிபட்டுவிட்டான்.'

"டாக்டர்...! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"உண்மையைச் சொல்லிக் கொண்டு இருக்கிறேன் சுபாஷ். பதினைந்து நிமிடங்களுக்கு முன்னால் அந்த சுனில் சர்மா சாலை விபத்து ஒன்றில் லாரி மோதி இறந்துவிட்டான். போட்டோவைப் பார்க்கிறாயா?" சொன்ன டாக்டர் ஹரிகோவிந்த், மேஜை மேல் வைத்து இருந்த ஒரு செல்போனை எடுத்து அதில் பதிவாகியிருந்த போட்டோ ஒன்றைக் காட்ட, சுபாஷ் அதில் பார்வையைப் போட்டார்.

போட்டோவில் இளைஞன் ஒருவன் ரோட்டோரமாய் ரத்தச் சகதியில் குப்புற விழுந்து கிடந்தான்.

ஹரிகோவிந்த் புன்னகைத்தார்.

"என்னை மிரட்டியவன் இப்போது உயிரோடு இல்லை..."

"டா...க்...ட...ர்..."

"என்ன சுபாஷ்....? 'சுனில் சர்மா இறந்தது உண்மையிலேயே விபத்தா... இல்லை கொலையா.' என்று கேட்கிறாய்... அப்படித் தானே?"

"ஆமாம் டாக்டர்...

ஹரிகோவிந்த் சிரித்தார். "உன்னுடைய சந்தேகம் சரியானதுதான் சுபாஷ்...! சுனில் சர்மாவின் மேல் மோதிய லாரி தியோடர் ஏற்பாடு பண்ணிய லாரிதான். மோதிவிட்டு

தப்பித்துப் போய்விட்டது. எல்லாம் தியோடரின் வேலை.”

“டாக்டர்! ஒரு சந்தேகம்.”

“என்ன...?”

“உங்களுக்குத் துண்டுச்சீட்டு கொடுத்தது சுனில் சர்மாதான் என்று தியோடர்க்கு எப்படி தெரிந்தது...?”

‘சுபாஷ்...! நான் டெல்லிக்கு என்னுடைய ஆராய்ச்சி நிமித்தம் வந்துவிட்டாலே தியோடரும் அதில் மறைமுகமாய் பங் கெடுத்துக் கொள்வார். செமினார் முடிந்ததும் என்னைப் பார்ப்பதற்காக வந்தவர் எனக்குத் துண்டுச் சீட்டுக் கொடுத்த சுனில் சர்மாவையும் நோட்செய்து அவன் செமினார் அரங்கை விட்டு வெளியேறும்போது பின் தொடர்ந்து போய் மடக்கிப் பிடித்து விசாரித்து இருக்கிறார். அவன் சரியான பதில் சொல்லாத தால் தியோடர் தன் கைவசம் இருந்த மயக்க மருந்து ஸ்பிரேயரை பயன்படுத்தி சுனில் சர்மாவை நினைவு இழக்க வைத்து தன்னுடைய காரின் பின்சீட்டில் படுக்க வைத்துவிட்டு எனக்கு செல்போன் மூலம் தகவல் கொடுத்தார்.”

“டாக்டர்...! சுனில் சர்மாவுக்கு எப்படி உங்களுடைய சிஏஎம் ப்ராஜக்ட் பற்றிய உண்மை தெரிந்தது...?”

“சுனில் சர்மாவுக்கு இந்த விஷயத்தைக் கொண்டு போனது யார் என்கிற ரகசியத் தையும் தியோடர் கண்டுபிடித்துவிட்டார்.”

“யார் அது...?”

“தியோடரிடம் போட்டோ இருக்கிறது. அவரையே இங்கே வரச்சொல்கிறேன்” சொன்ன ஹரிகோவிந்த் தன் செல்போனில் தியோடரை தொடர்பு கொண்டு பேச - அவர்

ஐந்தாவது நிமிடம் தியோடர் அறைக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார்.


தியோடர் ஆறடி உயரத்தில் திடகாத்ரமாய் தெரிந்தார். ஒரு போலீஸ் அதிகாரியைப் போன்ற தோற்றம். தலைமுடியை ட்ரிம் செய்து மீசை வளர்ப்பில் பிரியம் காட்டியிருந்தார்.

"தியோடர்...! என்னுடைய சிஏஎம் ப்ராஜக்ட் பற்றிய உண்மைகளை அந்த சுனில்சர்மாவுக்கு சொல்லி, அவன் மூலம் என்னை ப்ளாக்மெயில் செய்து பயமுறுத்தி பணம் பறிக்க திட்டம் போட்டவன் யார் என்பது உனக்கும் தெரியும்; எனக்கும் தெரியும். அவன் யார் என்பது சுபாஷுக்குத் தெரியவில்லை. உன்னிடம் உள்ள அந்த 'துரோகி'யின் போட்டோவை எடுத்துக் காட்டு...!"

தியோடர் தன் பேண்ட்டின் பின்பக்க பாக்கெட்டுக்கு கையைக் கொண்டு போய் போஸ்ட் கார்ட் ஸைஸ் போட்டோ ஒன்றை எடுத்து சுபாஷிடம் நீட்ட அவர் வாங்கிப் பார்த்தார்.

அதிர்ந்தார்.

போட்டோவில் இருந்தது சுபாஷ்.



## 11

***33 கோடி புராண தெய்வங்களிடமும், அந்நிய நாட்டவர் நம்மிடையே புகுத்தி இருக்கும் இதர தெய்வங்களிடமும் நம்பிக்கை இருந்தாலும் கூட ஒருவனிடத்தில் தன்னம்பிக்கை***

**இல்லாவிட்டால் அவன் ஒரு சாதாரண செயலிலும் கூட வெற்றி பெற முடியாது. நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னை தைரியசாலியாய் நினைத்துக் கொண்டால் தைரியம் உள்ளவனாய மாறுவாய். கோழையாக நினைத்துக் கொண்டால் கோழையாக மாறுவாய்.**

இன்ஸ்பெக்டர் ஷ்யாம் சுந்தர், சப்-இன்ஸ்பெக்டர் கனகவேலோடும் இரண்டு கான்ஸ்டபிள்களோடும் 'சாமரம்' அலுவலகம் வந்து சேர்ந்தபோது அலுவலகம் வேண்டாத ஒரு நிசப்தத்தில் உறைந்து போயிருந்தது. ஊழியர்கள் கலக்கம் பரவிய கண்களோடு சுவரோரங்களில் தெரிந்தார்கள்.

வெற்றிவேல் முருகன் ஷ்யாம் சுந்தரை எதிர்கொண்டார். "ஸார்...! ரஞ்சிதம் ஒரு தைரியமான பொண்ணு. இப்படியொரு மரணத்தை நான் எதிர்பார்க்கலை..."

"டாக்டர் வந்து பார்த்தாரா...?"

"ம்... பக்கத்து காம்பௌண்ட்டில் இருக்கிற டாக்டர் ராஜாராம் வந்து பார்த்தார் ஸார்."

"என்ன சொன்னார்?"

"விஷத்தின் காரணமாய் மரணம் ஏற்பட்டு இருக்கலாம்ன்னு டாக்டர் சொன்னார்."

"எப்படி விஷம்...?"

"அதான் தெரியலை ஸார்..."

"பாடி எங்கே...?"

"என்னோட ரூம்ல..." வெற்றிவேல் முருகன், இன்ஸ்பெக்டர் ஷ்யாம் சுந்தரை தன்னுடைய அறைக்குக் கூட்டிப் போனார்.

காஞ்சனாவின் அப்பாவும் அம்மாவும் திகிலடித்துப் போன முகங்களோட அறையின் மூலையில் நின்றிருந்தார்கள். ஷ்யாம் சுந்தர் அவர்களைப் பார்த்துவிட்டுக் கேட்டார்.

"இவங்கதான் தன்னோட பொண்ணு குணமானதுக்கு நன்றி தெரிவிக்க வந்த பேரண்ட்ஸா...?"

"ஆமா... ஸார்...! ரஞ்சிதத்தோட கழுத்தில் மாலையைப் போட்டுட்டு ஃப்ரூட்ஸை வாங்கிக்க சொல்லி பேசிட்டு இருக்கும் போதே ரஞ்சிதம் மயங்கி விழுந்துவிட்டார். விழுந்த அடுத்த விநாடியே மூக்குல ரத்தம், வாய்ல ரத்தம்."

ஷ்யாம் சுந்தர் குனிந்து ரஞ்சிதத்தின் உடலை உன்னிப்பாய்ப் பார்த்துவிட்டு வெற்றிவேல் முருகனை ஏறிட்டார்.

"ரஞ்சிதம் காலையில் வேலைக்கு வரும்போது எது மாதிரியான மனநிலையில் இருந்தாங்க...?"

"நல்ல உற்சாகமான மனநிலையில்தான் இருந்தாங்க. என்னைப் பார்த்ததும் சிரிச்சு கிட்டே "குட்மார்னிங்" சொன்னாங்க..."

"இங்கே மொத்தம் எத்தனை பேர் வேலை பார்க்கிறாங்க?"

"ஏழு பேர் ஸார். மூணு ஆண்கள் நாலு பெண்கள்..."

"ஏழு பேர்க்கும் கவுன்ஸிலிங் பண்ற வேலைதானா?"

"ஆமா... ஸார்..."

"ரஞ்சிதத்துக்கு சொந்த ஊர்?"

"இதேதான் ஸார்... தரமணியில் வீடு. அம்மா இல்லை. அப்பா மட்டும்தான். அவர் செல்போனுக்கு ட்ரை பண்ணிப் பார்த்தோம். நாட் ரீச்சபிள்ன்னு வந்தது. பத்து நிமிஷத்

துக்கு ஒரு தடவை ட்ரை பண்ணிட்டு இருக்கோம்... அவர் லைன்ல கிடைக்கலை."

"ரஞ்சிதாவோட மரணத்துக்குக் காரணம் பாய்ஸன்தானா?" ஷ்யாம்சுந்தர் கேட்டதும் அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் நின்றிருந்த டாக்டர் மெல்ல பக்கத்தில் வந்தார். "நோ... டவுட் இன்ஸ்பெக்டர்...! இந்தப் பொண் ணோட மரத்துக்குக் காரணம் பாய்ஸன்தான். பட்... அது எது மாதிரியான பாய்ஸன்னு ஐடெண்டிஃபை பண்ண ஒரு முழுமையான போஸ்ட் மார்ட்டம் அவசியம்."

"இந்த ஆபீஸ்ல ரஞ்சிதத்துக்கு தனியறை இருக்கா?"

"இருக்கு ஸார். அதை 'கவுன்சிலிங் கேபின்'ன்னு சொல்லுவோம். அந்த கேபின்ல உட்கார்ந்துகிட்டுத்தான் எங்களைத் தேடி வர்றவங்களுக்குகவுன்ஸிலிங் கொடுப்போம்."

"அந்த அறையைப் பார்க்கலாமா?"

"ப்ளீஸ்..."

வெற்றிவேல் முருகன் கூட்டிக் கொண்டு போனார். ஹாலின் மூலையில் காட்போர்டால் தடுக்கப்பட்டிருந்த ரஞ்சிதத்தின் கேபினைக் காட்டினார். ஷ்யாம்சுந்தர் உள்ளே நுழைந்தார். எட்டடிக்கு எட்டடி என்ற அளவில் அந்த கேபின் தெரிந்தது. ஒரு சிறிய பாலிமர் மேஜை. அதன் மேல் ஒரு கம்ப்யூட்டர். மேஜைசுத்தமாய்இருந்தது.இழுப்பறையைத் திறந்தார். உள்ளே ப்ரவுன் உறைக்குள் சி.டி. ஒன்று தெரிந்தது. சுவரின் மேல் ஸ்கெட்ச் பேனாவால் எழுதப்பட்ட அந்த எழுத்துக்கள் பார்வைக்கு கிடைத்தன. ஷ்யாம் சுந்தர் படித்தார்.

'நான் ரஞ்சிதம் பேசுகிறேன்!'

வெற்றிவேல் முருகனிடம் சி.டி.யைக் காட்டினார். "இதை நீங்க பார்க்கலையா?"

"பார்க்கலை ஸார்... இப்பத்தான் கேபினுக்குள்ளேயே நுழையறேன்."

"இந்த சி.டி.யை கம்ப்யூட்டர்ல போடுங்க."

வெற்றிவேல் முருகன் வாங்கிப் போட்டார். அது ஆடியோ சி.டி. வாய்ஸ் மட்டும் கேட்டது. ரஞ்சிதத்தின் குரல்.

'எல்லோர்க்கும் என் கடைசி வணக்கம். இந்த ஆடியோ சி.டி.யை நீங்கள் எல்லோரும் கேட்டுக் கொண்டு இருக்கும்போது நான் உயிரோடு இருக்க மாட்டேன். நான் சாப்பிட்ட விஷம் என் உயிரைப் போக்கியிருக்கும். முதலில் போலீஸ்துறைக்கு ஒரு அன்பான வேண்டுகோள். என்னுடைய தற்கொலைக்கு யாரும் காரணம் இல்லை. முழுக்க முழுக்க நானே காரணம். இந்த'சாமரம்' என்கிற அமைப்பு உண்மையிலே சமுதாய அக்கறை யோடு செயல்படும் ஒரு உன்னதமான அமைப்பு. வாழ்க்கையில் வெறுப்புற்று தற்கொலை எண்ணத்தோடு இங்கே வரும் எத்தனையோ பேர்க்கு நான் கவுன்சிலிங் கொடுத்து அவர்களுடைய மனதில் நம்பிக்கையை வளர்த்து அவர்களுடைய வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றி யிருக்கிறேன். ஆனால் எனக்கு நானே கவுன்ஸிலிங் கொடுத்துக் கொள்ள முடிய வில்லை. என்னுடைய தற்கொலைக்குப் பெரிதாய் எந்த ஒரு காரணமும் இல்லை. போலீஸார் என்னை மறந்துவிட்டு வேறு வேலை பார்க்கப் போகலாம். வெற்றிவேல் முருகன் ஸார் ரொம்பவும் நல்லவர். அவரை விசாரணை என்ற பெயரில் இம்சைப்படுத்த வேண்டாம். இந்திய ஜனத்தொகையில் ஒன்று குறைந்துவிட்டது. அவ்வளவுதான்...!'

பேச்சு நின்றது. வெற்றிவேல் முருகன் கண்களில் நீரோடு, ஷ்யாம் சுந்தரை

ஏறிட்டார். "ஸார்... திஸ் ஈஸ ஹைலி அன்ஃபார்சுனேட்... இங்கே வேலை செய்கிற பெண்களிலேயே ரஞ்சிதா தான் திறமையாய் கவுன்சிலிங் கொடுப்பவள். 'அவள் தற்கொலை' என்கிற விஷயத்தை என்னால் ஜீர்ணிக்க முடியலை. இதுல ஏதோ விஷமம் இருக்கு..."

"விஷமம்ன்னா...?"

"எனக்கு சொல்லத் தெரியலை ஸார்..."

"ரஞ்சிதம் தற்கொலை பண்ணிக்கலை. கொலை; செய்யப்பட்டு இருக்கலாம்ன்னு சொல்ல வர்றீங்களா?"

"மே...பி...ஸார்."

"அப்படீன்னா இந்த சி.டி.யில் இருக்கிற வாய்ஸ் ரஞ்சிதத்தோட வாய்ஸ் இல்லைன்னு சொல்ல வர்றீங்களா?"

"ஸார்...! நீங்க கேட்கிற கேள்விக்கெல்லாம் என்னால பதில் சொல்ல முடியலை. பட்... ஒரே ஒரு விஷயத்தை மட்டும் உங்ககிட்ட சொல்லிக்க விரும்பறேன்..."


"சொல்லுங்க..."

"ரஞ்சிதத்தோட மரணத்தை தற் கொலைன்னு முடிவு பண்ணி ஃபைலை க்ளோஸ் பண்ணிடாதீங்க... கேஸை ஆழமா த்ரூ பண்ணுங்க... நான் என்னோட முழு ஒத்துழைப்பையும் தர்றேன்...!" வெற்றிவேல் முருகன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சப்-இன்ஸ்பெக்டர் கனகவேல் பக்கத்தில் வந்தார். ஷ்யாம் சுந்தரை ஏறிட்டார். "ஸார்...! மேஜையோட ரெண்டாவது இழுப்பறையைத் திறந்து பார்த்தபோது இந்த சாவி கிடைச்சது. சாவியோடு சேர்த்துக் கட்டப்பட்ட ஒரு 'டேக்'கில் 217 என்ற எண் எழுதப்பட்டு இருக்கு."

ஷ்யாம் சுந்தர் சாவியை வாங்கிப் பார்த்தார். அது காட்ரெஜ் கம்பெனியின் சாவி என்பது பார்த்த மாத்திரத்தில் தெரிந்தது. சாவியின் வளைப்பகுதியில் மூன்று ஆங்கில எழுத்துகள் என்க்ரேவ் செய்யப்பட்டு இருந்தது.

பார்வையை உன்னிப்பாக்கினார்.

BOB



# 12

**பொன்னான நகைகளை விரும்பு கிறோம். ஆனால் பொன் மொழிகளை மட்டும் தள்ளி வைத்து விடுகிறோம். இதோ சில:**

1. **வணங்க வேண்டிய தெய்வங்கள்: தாய் தந்தை.**
2. **மிகமிக நல்ல நாள்: இன்று.**
3. **மிகப்பெரிய பரிசு: மன்னிப்பு.**
4. **என்றென்றும் வேண்டியது: பணிவு.**
5. **வேண்டவே வேண்டாதது: வெறுப்பு.**

சுபாஷ் தன்னுடைய போட்டோவைப் பார்த்துக் கொண்டு வியர்த்தார். கலவரமாய் டாக்டர் ஹரிகோவிந்ததையும் தியோடரையும் ஏறிட்டார்.

“எ...எ...எதுக்காக என்னோட போட்டோ?“

டாக்டர் புன்னகைத்தார்.

“ஓ...! இது... உன்னோட போட்டோவா...? அப்படீன்னா அந்த சுனில் சர்மாவுக்கு நீதான் கூட்டாளி...”

“டாக்....க்...ட.....ர்...! இது அநியாயம். நான் எந்தத் தப்பும்பண்ணலை. எனக்கு அந்த சுனில் சர்மா யார்ன்னே தெரியாது.”

"தியோடர்...! சுபாஷுக்கு அந்த சுனில் சர்மா யார்ன்னே தெரியாதாம்... உங்ககிட்டே இருக்கிற அந்த போட்டோ ஆல்பத்தை எடுத்துக்காட்டுங்க. பதினைஞ்சு நாளைக்கு முன்னாடி சுபாஷ் டெல்லிக்கு தனியாய் புறப்பட்டு வந்ததும், சுனில்சர்மாவை சந்திச்சுப் பேசினதும், டெல்லி பாலிகஞ்ச் மார்க்கெட்ல சுத்தினதும் போட்டோக்களாய் மாறியிருக்கிறதைப் பார்க்கட்டும்."

தியோடர் தன் இடுப்புக்கு கையைக் கொண்டு போய் அந்த மினி ஆல்பத்தை எடுத்த சுபாஷை நோக்கி வீச, அவர் நடுக்கமாய் பிடித்துப் பார்த்தார்.

வியர்ப்பது அதிகமாயிற்று.

'எப்படி எடுத்தார்கள்...?'

'பயணத்தை எவ்வளவோ ரகசியமாய் வைத்து இருந்தும் கண்டுபிடித்து இருக் கிறார்கள்!'

'எங்கே... தப்பு செய்தேன்?'

"என்ன சுபாஷ்... இப்பவாவது நம்பறியா? இல்லே இன்னமும் எனக்கு சுனில்சர்மாவைத் தெரியாதுன்னு சொல்லிட்டிருக்கப் போறியா?"

சுபாஷ் நடுக்கமாய் டாக்டரைப் பார்த்து கைகளைக் குவித்தார். 'என்னை மன்னிச் சுடுங்க டாக்டர்... உங்களை ப்ளாக்மெயில் பண்ணி பணம் பறிக்கலாம்ன்னு திட்டம் போட்டது தப்புதான்..."

"நான் உனக்கு நல்ல சம்பளம் கொடுத்து என்னோட அஸிஸ்டெண்டாய் வெச்சு இருந்தற்கு நீ காட்ற நன்றி இதுதானா...?"

"ஸாரி டாக்டர்..."

"சுனில் சர்மாவும், நீயும் கூட்டு சேர்ந்தது எதுக்குன்னு தெரியாமே இருந்தது. அதை

தெரிஞ்சுக்கத்தான் நானும் செமினார்ல அந்தத் துண்டுக் காகிதத்தைப் பார்த்து பயப்படற மாதிரி நடிக்க வேண்டியிருந்தது. உன்னோட நோக்கம் இதுதான்னு தெரிஞ் சதுமே தியோடர், சுனில் சர்மாவோட கதையை சூட்டோடு சூட்டாய் முடிச்சுட்டான். இப்ப... நீ...”

சுபாஷ் வேகமாய் எழுந்து போய் டாக்டரின் கால்களில் விழுந்தார். “ஸாரி... டாக்டர்...! குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க ஆசைப் பட்ட புத்திகெட்டதனமாய்...!”

“எழுந்திரு சுபாஷ்...!”

“என்னை மன்னிச்சிட்டதாய் சொல்லுங்க டாக்டர்.”

“நான் உன்னை மன்னிச்சுட்டேன் சுபாஷ்!”

“தேங்க்யூ டாக்டர்...” சுபாஷ் எழுந்து நின்று கண்ணீரில் விழிகளைத் துடைத்துக் கொண்டார்.

“பட்...!” என்றார் டாக்டர். “நான் உன்னை மன்னிச்சாலும் கொஞ்ச நேரத்துக்கு முந்தி நீ குடிச்ச விஸ்கி உன்னை மன்னிக்காது போலிருக்கே...?”

“டா...க்...ட...ர்...”

“என்ன அப்படி பார்க்கிறே...? நீ குடிச்ச விஸ்கி மோசமான விஸ்கி. உன்னை மாதிரியான நம்பிக்கைத் துரோகிகளை அதுக்கு நிறையவே பிடிக்கும்... உனக்கு இன்னும் பத்து நிமிஷத்துல தூக்கம் நல்லா வரும். போய்ப் படுத்தா... அடிச்சு போட்ட மாதிரி தூக்கம் வரும். நாளைக்கு காலையில் ஒன்பது மணிக்குத்தான் நீ கண்ணை முழிப்பே. அப்படி நீ முழிச்சுப் பார்க்கும்போது உன்னால பேச முடியாது. கையையும் காலையும் அசைக்க முடியாது. ஏன்னா

உனக்கு 'மஸ்குலர் டிஸ்ட்ரபி' என்கிற வியாதி அட்டாக் ஆகியிருக்கும். இது மாதிரியான நோய் லட்சத்துல ஒருத்தர்க்குத்தான் வரும். உனக்கு அதிர்ஷ்டம் இருக்கிற காரணத்தால அந்த நோய் உன் கிட்டே வந்து உன்னை மரணத்தோட மடியில் போட்டு தாலாட்ட ஆரம்பிச்சிருக்கும்."

சுபாஷின் கண்கள் பயத்தில் விரிந்து இதயத்துடிப்பு அதிகரித்துக் கொண்டிருக்க - டாக்டர் தொடர்ந்தார்.

"இந்த 'மஸ்குலர் டிஸ்ட்ரபி' நோய் ஒருத்தர்க்கு வந்தா உடம்பல் இருக்கிற ஒவ்வொரு உறுப்பும் கொஞ்சம் கொஞ்சமாய் செயல் இழந்துட்டு வரும்... மொதல்ல அந்த நோய் இதயத்தைத் தாக்க ஆரம்பிச்சா உனக்கு முடிவு சீக்கிரமே இருக்கும். எப்படியும் ஒரு மாசத்துக்குள்ளே.

அந்த 'மஸ்குலர் டிஸ்ட்ரபி' உன்னை இந்த பூமியிலிருந்து வழியனுப்பி வைக்கு.....

டாக்டர் பேசிக் கொண்டிருக்கும்போதே தியோடர் அந்தப் பேச்சில் குறுக்கிட்டார். "சுபாஷ்! அந்த சுனில்சர்மாவோட கதையை முடிச்ச மாதிரியே உன்னோட கதையையும் ரோட்ல வெச்சு முடிக்க நினைச்சேன். ஆனா டாக்டர் தான் தன்னோட 'CAM' ப்ராஜக்ட்டின் ஆராய்ச்சிக்காக உன்னை பரிசோதனை எலியாய் உபயோகப்படுத்திக் கொள்ளப் போறதாய் சொன்னார். 'மஸ்குலர் டிஸ்ட்ரபி' நோயை உண்டாக்குகிற வைரஸ் ஜுரத்தை உன்னோட உடம்புக்குள்ளே செலுத்திப் பார்க்க ஆசைப்பட்டார். எலிகளுக்கும், முயல்களுக்கும் நடத்தப்பட்ட சோதனைகள் வெற்றிகரமாய் நடந்தது. அதுக்கபபுறம் அந்த சோதனைக்கு உட்படுத்தப் போகிற முதல் மனிதன் நீதான்...! கொஞ்ச நேரத்துக்கு முந்தி

நீ சாப்பிட்ட விஸ்கியில் அந்த வைரஸ் ஜுரத்தை கலந்துட்டார் டாக்டர். இந் நேரத்துக்கு அந்த ஜுரம் உன்னோட உடம்பில் தன்னோட வேலையைக் காட்ட ஆரம்பிச்சிருக்கும்."

சுபாஷ் வியர்த்து மற்றும் வியர்வை உடம்புடன் டாக்டர்க்கு முன்னால் போய் மண்டியிட்டு கெஞ்ச ஆரம்பித்தார்.

"ப்ளீஸ்...டாக்டர்...! நான் பண்ணினது தப்புதான். எனக்கு ஏதாவது மாற்று மருந்து குடுத்து என்னோட உயிரைக் காப்பாத்துங்க டாக்டர்...! ப்ளீஸ்... டாக்டர்..."

"காலம் கடந்த ஞானோதயம்...!" டாக்டர் சிரித்துக் கொண்டு இருக்கும்போதே -

அறைக்கதவு மெலிதாய் தட்டப்படும் சத்தமும் அதைத் தொடர்ந்து அழைப்பு மணியின் ஒலியும் எழுத்நது.

டாக்டர் ஹரிகோவிந்தும், தியோடரும் சரேலென்று பார்வைகளை உயர்த்தி ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

"தியோடர் யாரது?"

"தெரியலையே டாக்டர்...!"

"கதவைத் திறக்கிறதுக்கு முன்னாடி ஒரு வேலை பண்ணுங்க. இந்த சுபாஷோட வாய்க்கு ஒரு பிளாஸ்டரை ஒட்டி அவனோட கையையும் காலையும் கட்டிப் போட்டு அந்தக் குளியலறையில் தள்ளி தாழ் போடுங்க..."

"எஸ்... டாக்டர்...!" தலையாட்டிய தியோடர் உடனே செயல்பட்டார். டாக்டரின் ப்ரீப்கேஸைத் திறந்து ப்ளாஸ்டர் ரோலையும், நைலான் கயிற்றையும் எடுத்து மின்னல் வேகத்தில் சுபாஷைக் கட்டி, வாயில் ப்ளாஸ்டரை ஒட்டி குளியலறைக்குள்

உருட்டிவிட்டார். கதவை வெளிப்பக்கமாய் தாழிட்டுக் கொண்டவர் மெதுவாய் நடந்து போய் அறைக் கதவின் தாழ்ப்பாளை விலக்கினார்.

வெளியே -

ஒரு அழகான இளம் பெண்ணும், உயரமாய் இரண்டு இளைஞர்களும் தெரிந்தார்கள்.

தியோடர் கேட்டார்.

"யார் வேண்டும்...?"

அந்த இளைஞர்கள் இரண்டு பேரும் அந்த இளம் பெண்ணைப் பார்த்தார்கள்.

"சோனா...! நீ சொன்ன ஆள் இவன்தானா?"

அந்த சோனா "ஆமாம்" என்பதுபோல் தலையசைத்துவிட்டு "இந்த ஆள்தான் அண்ணா" என்றாள். அடுத்த விநாடியே இளைஞர்கள் இரண்டு பேரும் தியோடரின் மேல் பாய்ந்து அவருடைய இரண்டு பக்கத் தோள்பட்டைகளையும் கெட்டியாகப் பற்றிக் கொண்டார்கள்.

ஹரிகோவிந்த் பதட்டத்தோடு ஓடி வந்தார். "நீங்கள் யார்...? எதற்காக அவரை இப்படி பிடித்துக் கொண்டு இருக்கிறீர்கள்?"

இளைஞர்களில் ஒருவன் அந்தப் பெண்ணைப் பார்த்தான். "சோனா...! இவன் என்ன செய்தான் என்று அவர்க்குச் சொல்."

அந்தப் பெண் சோனா ஹரிகோவிந்தை ஏறிட்டாள். "சென்ற வாரம் ரீகல் சர்ச்சின் ஏரியாவில் உள்ள 'யுவர் அல்டிமேட் நீட்ஸ்' என்ற டிபார்ட்மெண்ட்ல் ஸ்டோர்க்கு நான் காஸ்மெடிக்ஸ் வாங்குவதற்காகப் போயிருந் தேன். அப்போது இவன் அந்த டிபார்ட் மெண்டல் ஸ்டோர்க்கு வந்தான். என்னிடம் வலிய வந்து பேச்சுக் கொடுத்தான். உன்னை

எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறது என்று சொன்னான். நான் இவனோடு பேசுவதை தவிர்த்தாலும் இவன் விடாமல் என்னிடம் ஏதேதோ பேச முற்பட்டான். இவனுக்கு பொருத்தமான சர்ட்டை தேர்ந்தெடுத்து கொடுக்கச் சொன்னான். நான் முடியாது என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நகர முயன்றபோது என் கையைப் பிடித்தான். நான் கையை உதறிவிட்டு ஓடிவந்து விட்டேன். வீட்டுக்கு வந்ததும் என்னுடைய இரண்டு அண்ணன்களிடமும் விஷயத்தைச் சொல்ல அவர்களும் உடனே புறப்பட்டு டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோர்க்கு வந்தார்கள். அதற்குள் இவன் தப்பிப் போய்விட்டான். ஆனால் இன்றைக்கு இந்த ஹோட்டலுக்கு எதிரே இருக்கும் புக் ஷாப்பில் புத்தகங்களை வாங்க வந்தபோது இவன் ஹோட்டலுக்குள் போய்க் கொண்டிருந்தான். நான் பின் தொடர்ந்தேன். இந்த அறைக்குள் நுழை வதைப் பார்த்ததும்... செல்போன் மூலம் என்னுடைய அண்ணன்களுக்கு தகவல் கொடுத்தேன். அவர்களும் வந்து விட்டார்கள்."

டாக்டர் ஹரிகோவிந்த் தியோடரை ஒரு கோபப் பார்வை பார்த்தார். "என்ன தியோடர்...! இந்தப் பெண் சொல்வது உண்மையா?" முகம் வெளிறிப் போயிருந்த தியோடர் அந்த திடகாத்திரமான இளைஞர் களின் பிடியில் இருந்து திமிறிக் கொண்டே சொன்னார்.

"இல்லை... டாக்டர்...! இந்தப் பெண் சொல்வது பொய்...! இந்தப் பெண்ணை நான் இதற்கு முன் பார்த்தது கிடையாது. இவர்கள் ஏதோ தப்பாக..."

"என்னடா... சொன்னாய்...? என்னுடைய தங்கை பொய் சொல்கிறாளா...?

செய்வதையும் செய்துவிட்டு இவள் மேல் பழியைப் போடுகிறாயா...?" அந்த இரண்டு பேர்களில் ஒருவன் கோபமாய் கத்திக் கொண்டே எதிர்பார்க்காத ஒரு விநாடியில் தியோடரின் வயிற்றில் ஓங்கி ஒரு குத்து விட்டான்.

தியோடர்க்கு பொறி கலங்கிப் போயிற்று. அடிவயிற்றில் இருந்த பெருங்குடலும், சிறு குடலும் சிறு சிறு துண்டுகளாய் சிதறி நைந்து போன உணர்வு. பெரிதாய் அலறிக் கொண்டு இரண்டு கைகளாலும் வயிற்றைப் பிடித்துக் கொண்டு குனிந்தார்.

ஒருவன் கழுத்தைப் பிடிக்க இன்னொருவன் தியோடரின் தலைமுடியைப் பிடித்து தூக்கினான்.

"உண்மையைச் சொல்... என் தங்கையிடம் நீ வாலாட்டியது உண்மையா... இல்லையா?"

"இ....இல்லை..."

"இப்படியெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தால் இவன் வாயைத் திறந்து உண்மையைச் சொல்ல மாட்டான். நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை இவனுக்குக் காட்ட வேண்டியது தான். கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போடு..." ஒருவன் சொல்ல இன்னொருவன் கதவை அறைந்து சாத்தி தாழ்ப்பாள் போட்டான்.

ஹரிகோவிந்த் பதட்டப்பட்டார்.

"இதோ பாருங்கள்... பிரச்னை எதுவாக இருந்தாலும் சரி பேசி தீர்த்துக் கொள்ளலாம்."

"என்னது...! பேசித் தீர்த்துக் கொள்வதா...? பேசி தீர்த்துக் கொள்ள இது என்ன பிசினஸ் விஷயமா...? என்னுடைய தங்கையை இந்த நாய் சீண்டிப் பார்த்திருக்கிறான். கையைப் பிடித்து இருக்கிறான். அந்தக் கை இனிமேல் அவனுக்கு உபயோகப்படக் கூடாது. அதை


வெட்டி எடுத்துக் கொண்டு போகத்தான் வந்து இருக்கிறோம்."

"ப்ளீஸ்...! இவர் என்னுடைய நண்பர். அவர் அப்படி ஏதாவது தப்பு செய்து இருந்தால் அதற்காக அவர் சார்பாய் நான் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். அவரை எதுவும் செய்து விடாதீர்கள்."

"நீங்கள் மரியாதையாய் இந்த விஷயத்திலிருந்து தள்ளி நில்லுங்கள்.இவனுக்கு நீங்கள் வக்காலத்து வாங்கிப் பேசினால் உங்களுடைய கையையும் எடுக்க வேண்டியிருக்கும்."'

ஹரிகோவிந்த் மிரண்டு போனவராய் பின்வாங்கினார். இரண்டு இளைஞர்களில் ஒருவன் தன் முதுக்கு பக்கமாய் கையைக் கொண்டு போய் ஒரு அடி நீளமுள்ள பளபளப்பான அந்தப் பட்டாக் கத்தியை கையில் எடுத்தான்.

தியோடரின் சர்வாங்கமும் நடுங்கியது.



## 13

***அமெரிக்காவில் 'கரண்ட்' திடீரென்று கட்டானால் அவர்கள் மின்சார இலாகாவுக்குப் போன் செய்வார்கள். ஜப்பானில் மெயின் ஸ்விட்ச் போர்டுக்கு சென்று ப்யூஸ் போயிருக்கிறதா என்று சோதித்துப் பார்ப்பார்கள். ஆனால் இந்தியாவில் 'கரண்ட கட்டானால் பக்கத்து வீட்டைப் பார்ப்பார்கள்.***

இன்ஸ்பெக்டர் ஷ்யாம் சுந்தர் தன் கையில் வைத்திருந்த சாவியை வெற்றிவேல் முருகனிடம் காட்டினார்.

"இது உங்க அலுவலக சாவியா?"

அவர் வாங்கிப் பார்த்துவிட்டு தலையாட்டினார்.

"ஸார்...! இது எங்க சாவியில்லை. பட் இந்த `சாவியில் பாப் என்கிற ஆங்கில எழுத்துக்கள் என்க்ரேவ் செய்யப்பட்டு இருப்பதை பார்க்கும் போது எனக்கு ஒரு சந்தேகம் வருது."

"என்ன சந்தேகம்...?"

"இது ஒரு பேங்க் லாக்கர் சாவியாய் இருக்கலாம் ஸார். 'பாப்' என்கிற எழுத்துக்கள். 'பேங்க் ஆப் பரோடா'வின் ஹார்ட் ஃபார்மாய் இருக்கலாம். ரெண்டு தெரு தள்ளி தான் அந்த பேங்க் இருக்கு. நீங்க அந்த பேங்குக்குப் போய் ப்ராஞ்ச் மானேஜரை என்கொய்ரி பண்ணிப் பார்த்தா ஏதாவது க்ளூ கிடைக்கலாம். முடிஞ்சா ரஞ்சிதாவோட லாக்கரை ஒப்பன் பண்ணிப் பார்க்கலாம் ஸார்..."

"யூ...மே...பி....கரெக்ட் மிஸ்டர் வெற்றிவேல் முருகன் சொன்ன ஷ்யாம் சுந்தர். சப்-இன்ஸ்பெக்டர் கனகவேலை அழைத்துக் கொண்டு புறப்பட்டு இரண்டு தெருக்கள் தள்ளியிருந்த பேங்க் ஆஃப் பரோடாவுக்கு ஜீப்பில் பயணம் செய்து போய்ச் சேர்ந்தபோது பேங்க் மானேஜர் சுந்தரமூரத்தி காப்பியை ப்ளாஸ்கிலிருந்து டம்ளருக்கு வார்த்துக் கொண்டிருந்தார். போலீஸ் யூனிபார்மை பார்த்ததும் முகம் மாறிப் போனவராய் காப்பி டம்ளரைத் தள்ளி வைத்துவிட்டு "எஸ்" என்றார்.

"ஒரு என்கொய்ரி..."

"ப்ளீஸ்..."

"இந்த லாக்கர் சாவி உங்க பேங்க்கோட லாக்கர் சாவிதானே?"

அவர் வாங்கிப் பார்த்துவிட்டு "ஆமா... இது எங்க பேங்க்கோட லாக்கர் சாவிதான்."

"இந்தச் சாவி ரஞ்சிதா என்கிற பெண் ணோட மேஜை ட்ராயரில் இருந்தது. அந்தப் பெண்ணோட பேர்ல லாக்கர் அக்கவுண்ட் இருக்கான்னு பார்த்துச் சொல்ல முடியுமா...?"

"அந்தப் பொண்ணு ரஞ்சிதா எங்கே...?"

"ரஞ்சிதா இப்போ உயிரோட இல்லை..."

"ஏன்... என்னாச்சு...!"

"பாய்ஸன் சாப்பிட்டு சூஸைட்."

மானேஜர் முகம் இறுகிப் போனவராய்க் கேட்டார். "தற்கொலைக்கு காரணம்...?"

"தான் எழுதி வெச்ச கடிதத்துல ஒரு காரணத்தையும் குறிப்பிடலை. மொதல்ல ரஞ்சிதாவோட பேர்ல லாக்கர் அக்கவுண்ட் இருக்கான்னு பாருங்க... ஸார்..."

மானேஜர் உடனே தனக்கு முன்பாய் இருந்த கம்ப்யூட்டரை உசுப்பி லாக்கர் அக்கவுண்டில் நெம்பர் வாரியாக பெயர் களைப் பார்த்தார். முப்பது விநாடிகளுக்குப் பிறகு சொன்னார்.

"ரஞ்சிதா பேர்ல அக்கவுண்ட் இருக்கு."

"லாக்கரை ஓப்பன் பண்ணிப் பார்க்க ணுமே?"

மானேஜர் தயங்கினார். இன்ஸ்பெக்டர் ஷ்யாம் சுந்தர் கேட்டார். "எனி ப்ராப்ளம்?"

"ரஞ்சிதாவோட வீட்டு மெம்பர்ஸ் யாராவது இருந்துட்டா பரவாயில்லை. நாளைக்கு அவங்க வந்து ஏதாவது கேள்வி கேட்டாங்கன்னா ஐ... ஹேவ்... டூ... ஆன்ஸர்..."

"உங்களுக்கு அதைப்பத்தின கவலையே வேண்டாம் ஸார். இது போலீஸ்

ப்ரொஸீடிங்க்ஸ். யாரும் எந்த ஒரு கேள்வியையும் கேட்க முடியாது. ரஞ்சிதாவுக்கு ஃபாதர் மட்டும்தான். அவர் ஏதாவது கேள்வி கேட்டா நாங்க பதில் சொல்லிக்கறோம். நீங்க லாக்கரை ஓப்பன் பண்ணுங்க சார்."

மானேஜர் கேபினை விட்டு வெளியே வந்து லாக்கர் இன்சார்ஜ் பொறுப்பில் இருந்த அக்கௌண்ட்டிடம் லாக்கர் கீ பன்ச்சை வாங்கிக் கொண்டு லாக்கர் பெட்டகம் இருந்த அறையை நோக்கிப் போனார். ஷ்யாம் சுந்தர் பின்தொடர்ந்தார்.

லாக்கர்கள் இருந்த அறையை வெளிச்சத்திற்கு கொண்டு வந்த மானேஜர் ரஞ்சிதாவின் லாக்கர் நெம்பரைக் கண்டு பிடித்து இரண்டு சாவிகளையும் போட்டுத் திறந்தார்.

லாக்கர் பாக்ஸ் சதுரமாய் வாய் திறந்து கொண்டது. ஷ்யாம் சுந்தர் நெருங்கி உள்ளே பார்த்தார்.

ஒரு சிறிய ஜுவல் பாக்ஸும், ப்ரவுன் பேப்பரால் சுற்றப்பட்ட ஒரு பண்டலும் பார்வைக்குக் கிடைத்தது.

அவைகளை வெளியே எடுத்தார். ஜுவல் பாக்ஸில் சொற்பமாய் நகைகள். மெலிதாய் ஒரு செயின், இரண்டு ஜோடி கம்மல்கள். இரண்டு வளையல்கள்.

ப்ரவுன் நிற பண்டலைப் பிரித்தார்.

உள்ளே கட்டுக் கட்டாய் ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள்.

"கனகவேல்...!"

"ஸார்..."

"பணம் எவ்வளவு இருக்குன்னு கவுண்ட் பண்ணுங்க. கனகவேல் எண்ணிப் பார்த்துவிட்டு "பத்து லட்சம் இருக்கு ஸார்" என்றார்.


“லாக்கர்க்குள்ளே இன்னும் ஏதாவது இருக்கான்னு பாருங்க...”

கனகவேல் உள்ளே கையை விட்டுத் துழாவ ஒரு துண்டு காகிதம் கிடைத்தது. எடுத்துப் பார்த்தார். காகிதத்தில் கிறுக்கலாய் நான்கு வரிகள் எழுதப்பட்டு இருந்தது.

படித்தார்.

இது பாவப்பட்ட பணம். இது புண்ணியம் அடைய வேண்டுமானால் ஏதாவது ஒரு முதியோர் இல்லத்துக்கு என்னுடைய பங்களிப்பாக கொடுத்துவிடுங்கள். என்னுடையபெயரைக்குறிப்பிடவேண்டாம்.

–ரஞ்சிதா.



# 14

**எது நடந்தாலும் அதைப் பொறுத்துக் கொள்ளுங்கள். எதைக் குணப்படுத்த முடியாதோ அதைப்பொறுத்தேயாக வேண்டும். மகிழ்ச்சியுடன் பொறுத்துக் கொள்ளுங்கள். காலை முதல் இரவு வரை பலவிதமான வசதிக் குறைவுகள் தொல்லைகள் மற்றும் துன்பங்களுடன் வாழக் கற்றுக் கொள்ளுங்கள். பொறுமை, மனோபலம் உங்களிடம் அதிகரிக்கும்.**

பளபளத்த கத்தியைப் பார்த்ததும் தியோடரின் விழிகள் நிலைத்தன. அந்த இளைஞர்களில் ஒருவன் தன் தங்கை சோனாவிடம் கேட்டான்.

“இந்த... நாய்... உன்னை எந்தக் கையால் தொட்டான்?”

"வலது கை..."

தியோடர் வீறிட்டான்.

"கொஞ்சம் பொறுங்கள்... நீங்கள் நினைப்பது போல் நான் தியோடர் இல்லை. அகஸ்டின்...! தியோடர் என்னுடைய அண்ணன். எனக்கு இரண்டு நிமிஷங்களுக்கு முன்பாய் பிறந்தவன். நானும் தியோடரும் டிவின்ஸ்."

எல்லோரும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

"இவன் என்ன சொல்கிறான்?"

"நாம் கொடுக்கும் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக பொய் சொல் கிறான்."

தியோடர் மறுபடியும் அலறினான்.

"நான் சொல்வது பொய் இல்லை. உண்மை. வீணாக தப்பு செய்யாத என்னைத் தண்டித்து விடாதீர்கள். தியோடரும் நானும் ட்வின்ஸ்... உங்களுக்கு நம்பிக்கையில்லை யென்றால் என்னுடைய பேண்ட் பாக் கெட்டில் இருக்கும் பர்ஸை எடுத்து அதில் இருக்கும் போட்டோவைப் பாருங்கள். அதில் நானும் தியோடரும் ஒன்றாக நின்று போட்டோவுக்குப் போஸ் கொடுத்து இருப்போம்."

இளைஞர்களில் ஒருவன் இன்னொரு வனுக்கு கண்ணைக்காட்ட அவன் பாக்கெட்டுக்குள் கையை விட்டு பர்ஸை எடுத்தான். பிரித்தான்.

உள்ளே அந்தப் போட்டோ.

தியோடர்க்கு பக்கத்தில் அவனைப் போலவே ஜெராக்ஸ் பிரதி எடுத்த மாதிரி ஒருவன்.

"நான் தியோடர் இல்லை. அகஸ்டின்... என்னோட அண்ணன் தியோடர்தான். அழகான பெண்களைப் பார்த்துவிட்டால் வலிய போய் வழிவான். சிலசமயம் எல்லை மீறியும் போயிடுவான்."

அந்த இளைஞர்களும் பெண்ணும் திகைத்துக் கொண்டு இருக்கும்போதே டாக்டர் ஹரிகோவிந்த் அதிர்ச்சியோடு நிலைத்துப்போனவிழிகளோடு அகஸ்டினுக்குப் பக்கத்தில் வந்தார். அவனுடைய சட்டையை எட்டிப் பிடித்து உலுக்கினார்.

"நீ ... நீ ... தியோடர் .... இ .... இ .... இல்லையா?"

"இல்லை...."

"டெல்லியில் கடந்த மூன்று நாட்களாய் என்னோடு பழகியது நீயா...?"

"நானே...! இதற்கு முன்பு டெல்லி வந்த போதெல்லாம் பழகியது... பேசியது எல்லாமே என்னோட அண்ணன் தியோடரோடுதான்...!"

"எதற்காக இப்படி....? உன்னுடைய அண்ணன் எங்கே...?"

"உன்னுடைய அண்ணன் எங்கே...?"

அகஸ்டின் சிரித்தான். "என்னுடைய அண்ணன் தியோடரை நீங்கள் பார்க்க வேண்டுமா டாக்டர்?"

"ஆமாம்..."

"இன்னும் சிறிது நேரத்தில் தியோடர் இருக்கும் இடத்திற்கு நீங்களும் போய் விடலாம்..."

"தியோடர் எங்கே இருக்கிறான்...?"

"அவன் எங்கே இருக்கிறான் என்று நீங்களே அவனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். "சொன்ன அகஸ்டின் தன்னுடைய சட்டைப் பாக்கெட்டில் இருந்த

செல்போனை எடுத்து சில எண்களைத் தட்டிவிட்டு பேசினான். பேசப் பேச மைக்கை ஆன் செய்தான்.

"ஸார்...! நான் அகஸ்டின்..."

மறுமுனையில் குரல் ஒலித்தது.

"என்ன அகஸ்டின்...! உன்னுடைய செல்போன் அழைப்பு இவ்வளவு சீக்கிரத்தில் வந்துவிட்டது. உன்னிடம் இருந்து அழைப்பு வர எப்படியும் ஒரு மணி நேரத்துக்கு மேலாகும் என்று நினைத்தேன்."

"அதற்குள் ஒரு சின்ன இடைவேளை வந்துவிட்டது ஸார்..."

"இடைவேளையா...?"

"ஆமாம்... ஸார்... என்னோடு ஒட்டிக் கொண்டே பிறந்த என்னுடைய அருமைச் சகோதரன் தியோடர் சென்ற வாரம் ஒரு டிபார்ட்மெண்ட் ஸ்டோரில் சோனா என்கிற ஒரு பெண்ணிடம் சில்மிஷம் செய்து இருக்கிறான். அந்தப் பெண் இன்றைக்கு

என்னைப் பார்த்துவிட்டு நான்தான் தியோடர் என்று நினைத்துக் கொண்டு தன்னுடைய இரண்டு அண்ணன்களையும் கூட்டிக் கொண்டு வந்துவிட்டாள். நான் என் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக உண்மையைச் சொல்ல வேண்டியதாகி விட்டது.

"அந்தப்பெண்ணும் அவளுடைய அண்ணன் களும் பக்கத்தில் இருக்கிறார்களா?"

"இருக்கிறார்கள்."

"செல்போனை அவர்களிடம் கொடுங்கள்."

அகஸ்டின் செல்போனை அந்த இளைஞர் களில் ஒருவனிடம் நீட்டினான். "பேசுங்கள்!"

"போனில் யார்?"

"பேசுங்கள் தெரியும்."

அவன் செல்போனை வாங்கி காதில் வைத்தான்.

"ஹலோ...!"

மறுமுனைக் கேட்டது. "உங்கள் பெயர் என்ன?"

"யாதவ்...! நீங்கள்?"

"டெல்லி போலீஸ் கமிஷனர் வைபவ்..."

அடுத்த விநாடியே - அந்த யாதவ் உடனே பவ்யமானான்.

"ஸ...ஸார்..."

"மிஸ்டர் யாதவ்! நீங்கள் தேடிக்கொண்டு வந்த நபர் அகஸ்டின் கிடையாது. தியோடர் ஒரு க்ரிமினல். அவன் இப்போது எங்கள் கஸ்டடியில். அவன் மீது சில்மிஷக் குற்றங் களிலிருந்து சீரியஸ் குற்றங்கள் வரை ஏகப் பட்டவை இருக்கின்றன. அவன் இனிமேல் வெளியே வரமுடியாதஅளவுக்கு குண்டர் சட்டம் பாய்வதற்கு தயாராக உள்ளது. இப்போது அதே அறையில் உங்களோடு இருக்கும் டாக்டர் ஹரிகோவிந்த் ஒரு கொலைக் குற்றவாளி. இரண்டு வருடங் களுக்கு முன்பு சென்னையில் பயோரிசர்ச் சென்டரில் மருத்துவ விஞ்ஞானியாய் பணிபுரிந்த டாக்டர் மதுதேனராவும், ஹரிகோவிந்தும் 'CAM' என்ற செல் ஒட்டு பசை 'ப்ராஜக்ட்டை' செய்து வந்தார்கள். மதுதேனராவின் அபாரத் திறமையினால் அந்த ப்ராஜக்ட் வெற்றி பெற்றது. ஆனால் அந்தப் பெருமை முழுவதும் தனக்கே கிடைக்க வேண்டும் என்பதற்காக ஹரி கோவிந்த் மதுசூதனராவின் காரை விபத்துக் குள்ளாக்கி அவருடைய உயிரைப் பறித்தார். சென்னை பேலீஸாரும் வெளியுலகமும்

அதை ஒரு விபத்து என்று எண்ணி காலப் போக்கில் மறந்து விட்டாலும் டெல்லி சி.பி.ஐ. மட்டும் அதை மறக்காமல் இன்வெஸ்டிகேட் செய்தது. அதற்கு பலன் இப்போதுதான் கிடைத்தது. தியோடரின் தம்பி அகஸ்டினை பயன்படுத்தி ஹரிகோவிந்தை மடக்கினோம்."

யாதவ் சிரித்தான்.

'என்ன சிரிக்கிறீர்கள்?"

"எங்களுக்கும் பலன் இப்போதுதான் கிடைத்தது."

"என்ன சொல்கிறீர்கள்...?"

"ஸார். என்னுடைய பெயர் யாதவ். என்னுடன் வந்து இருக்கும் என் கொலிக்கின் பெயர் அன்வர். சோனா என்ற பெயரில் எங்களுக்கு தங்கையாக நடித்தது எங்கள் டிபார்ட்மெண்ட்டைச் சேர்ந்த சாதனா என்ற பெண்."

"டிபார்ட்மெண்ட்?"

"எஸ்... ஸார்..."

"சென்னை சி.பி.சி. ஐ.டி. ஸ்க்வாட்."

"மைகுட்னஸ்... உங்களுடைய நோக்கம்?"

"டாக்டர் ஹரிகோவிந்தை ட்ராப் செய்வது தான்...!அவரை ட்ராப் செய்வதற்கு என்ன காரணம் என்பதை நேரில் சொல்லுகிறோம்."

"ஓ.கே...! நீங்கள் நேரில் புறப்பட்டு வாருங்கள். அகஸ்டினுக்கு நான் இருக் குமிடம் தெரியும். செல்போனை அகஸ்டினிடம் கொடுங்கள்."

யாதவ் செல்போனை அகஸ்டினிடம் கொடுக்க அவன் வாங்கி பேசினான்.

"சொல்லுங்கள் ஸார்."

"சுபாஷ் எங்கே...?"

"இதே அறையின் டாய்லட்டுக்குள் கை கால்கள் கட்டப்பட்டு வாயில் ப்ளாஸ்டர் ஒட்டப்பட்டு ஒரு ஜடப் பொருளைப் போல் விழுந்து கிடக்கிறான்."

"டாக்டர் ஹரிகோவிந்த் என்ன சொல் கிறார்?"


"தன்னைச் சுற்றிலும் நடக்கிற சம்பவங் களைப் பார்த்து பிரமித்துப் போயிருக்கிறார்."

"அகஸ்டின்! டெல்லி சி.பி.ஐ. டாக்டர் ஹரிகோவிந்த மேல் ஒரு கண் வைத்து இருந்தது போலவே, சென்னை சி.பி.சி.ஐ.டி. போலீஸாரும் கண் வைத்து டாக்டரின் நடவடிக்கைகளை ட்ரேஸ் பண்ணியிருக் கிறார்கள். இரண்டு பேரும் வெவ்வேறு திசைகளில் பயணம் செய்த இருந்தாலும் அரைவட்டம் போட்டுக் கொண்டு ஒரே புள்ளியில் சந்தித்து இருக்கிறார்கள். மேலும்... "டெல்லி கமிஷனர் மேற்கொண்டு பேசும் முன்பு அகஸ்டின் பதற்றக் குரல் கேட்டது.

"ஸ...ஸ...ஸார்.... ஒரு நிமிஷம்..."

"என்ன அகஸ்டின்...?"

"டா...டாக்டர் ஹரிகோவிந்த் தப்பிச்சு வெளியே ஓடறார்..."



## 15

**நாம் மண்ணில் இருக்கும் நாட்களை விட பிறர் மனதில் இருக்கும் நாட்களே அதிகமாக இருக்க வேண்டும். அதுவே உண்மையான வாழ்க்கை.**

நீலக்கண்ணன் தன்னுடைய அலுவலக அறையில் உட்கார்ந்து ஃபைல் ஒன்றை

புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தபோது அறைக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு குரல் கொடுத்தான். மாலை மணி ஏழு.

"ப்ளீஸ் கெட் இன்..."

வெற்றிவேல்முருகன் உள்ளே நுழைந்தார்.

"ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்."

"ஓ... நீங்களா... ப்ளீஸ் கம்... எப்படி யிருக்கீங்க வி.வி.எம்...?"

"ஃபைன்..."

"உட்காருங்க..."

வெற்றிவேல் முருகன் உட்கார்ந்தார். மெல்ல பேச்சை ஆரம்பித்தார். "மிஸ்டர் நீலக்கண்ணன் உங்க மனைவி மிருணாளினி தற்கொலைப் பண்ணிகிட்டு இறந்து போய் இன்னியோடு ரெண்டு மாத காலம் முடியப் போகுது. அவங்க தற்கொலை பண்ணிகிட்டதுக்கான காரணம் என்னான்னு உங்களாலே கண்டுபிடிக்க முடிஞ்சுதா...?"

"இல்லை... பட்... அதுக்கான முயற்சிகளை எடுத்துக்கட்டேன்..."

"எது மாதிரியான முயற்சின்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"தாராளமாய்! இதுல என்ன ஒளிவு மறைவு இருக்கு! என்னோடு காலேஜில் படிச்ச சாதனா என்கிற பெண் இப்போ சென்னை சி.பி. சி.ஐ.டி. போலீஸ் டிபார்ட்மெண்ட்டில் ஒர்க் பண்ணிட்டு இருக்காங்க. ரெண்டு மாசத்துக்கு முன்னடியே ஒரு ரெஸ்டாரெண்ட்ல அவங்களை மீட் பண்ணி எல்லா விஷயத்தையும் சொன்னேன். சாதனா எல்லாத்தையும் கேட்டுட்டு 'உங்க மனைவியோட திடீர் தற்கொலைக்குப் பின்னாடி யாரோ ஒரு நபர் கண்டிப்பாய் இருக்காங்க. அந்த நபர் யார்ன்னு

கண்டுபிடிச்சா, காரணமும் வெளியே வந்துடும்ன்னு சொல்லி கேஸை அவங்க கொலிக்ஸ் ரெண்டு பேரோட சேர்ந்து இன்வெஸ்டிகேட் பண்ண ஆரம்பிச்சாங்க. நீங்க கொடுத்த சி.டி. கேசட்டையும் போட்டுப் பார்த்தாங்க...”

“சரி... உங்க மனைவி மிருணாளினியோட தற்கொலைக்கு யார் காரணம்? எது காரணம்ன்னு கண்டுபிடிச்சாங்களா...?”

“இன்னும் இல்லை...”

“அது சம்பந்தமாய் நான் உங்ககிட்டே கொஞ்சம் பேசலாமா?”

“ம்... சொல்லுங்க... என்ன விஷயம்?”

“போன வாரம் எங்க ‘சாமரம்’ அமைப்பில் பணிபுரிகிற ரஞ்சிதா என்கிற பெண் பாய்ஸன் சாப்பிட்டுச் செத்துட்டா. அவ ஏதோ ஒரு தப்பான காரியம் பண்ணிட்டு அதுக்கு கூலியாய் பத்து லட்ச ரூபாய் வாங்கி அதை லாக்கர்ல வெச்சிருந்திருக்கா. ‘இது பாவப்பட்ட பணம். ஏதாவது ஒரு முதியோர் இல்லத்துக்கு மொத்தப் பணத்தையும் கொடுத்துருங்க’ன்னு ஒரு துண்டு சீட்ல எழுதி வெச்சிருந்தாள். போலீஸார் அந்தப் பணத்தைக் கைப்பற்றி ஒரு விசாரணையை மேற்கொண்டபோது ரஞ்சிதாவோட ஃபாதரையும் விசாரணை பண்ணியிருக்காங்க. அவர் ஒரு புதுத் தகவலை சொல்லியிருக்கார்.”

“என்ன தகவல்...?”

“கடந்த ரெண்டு மாத காலமாவே ரஞ்சிதா அவ்வளவு உற்சாகமாய் இல்லையாம். ஏதோ ஒண்ணை பறிகொடுத்த மாதிரி இருந்தாளாம். காரணம் கேட்கும் போதெல்லாம் கவுன்ஸிலிங்கிற்கு வர்ற பெண்கள் சொல்ற

பிரச்னைகளைக் கேட்டு கேட்டு மனசுக்கு கஷ்டமாய் இருக்குன்னு சொல்லியிருக்கா... அதையும் அவர் நம்பியிருக்கார். ஆனா ராத்திரியில் நாலைஞ்சு தடவை தன்னுடைய செல்போனில் பேசாமே தன்னுடைய வீட்டுக்கு அடுத்தத் தெருவில் இருக்கிற டெலிபோன் பூத்திற்குப் போய் பேசியிருக்கா. ஒரு தடவை அவளோட ஃபாதரும் அவளை ஃபாலோ பண்ணிப் போய் ரஞ்சிதா எந்த நெம்பர்க்கு டயல் பண்ணிப் பேசியிருக் காங்கிறதைக் கண்டுபிடிக்க ரீடயல் பண்ணிப் பார்த்திருக்கார். அது ஒரு லேண்ட்லைன் நெம்பர். அந்த நெம்பரை நோட் பண்ணி எக்சேஞ்சில் இருக்கிற ஒரு நண்பர் மூலமா நெம்பர்க்கு உரிய நபர் யார்ங்கிறதையும் அட்ரஸையும் கண்டு பிடிச்சுட்டார்."

"யார் அந்த நபர்...?"

"அவர் ஒரு டாக்டர்... பேரு ஹரிகோவிந்த். மருத்துவ விஞ்ஞானத்துல பட்டம் வாங்கினவர்."

"ரஞ்சிதாவுக்கும் டாக்டர்க்கும் என்ன தொடர்பு?"

"ரஞ்சிதாவோட அப்பா அதைப்பற்றி விசாரிக்க இருந்தாராம். அதுக்குள்ளே ரஞ்சிதா தன்னோட முடிவைத் தேடிக்கிட்டா. இப்போ போலீஸ்ல அவர் இந்த விஷயத்தை சொன்னதும், போலீஸ் இன்ஸ்பெக்டர் ஷ்யாம் சுந்தர் பெசண்ட் நகரில் இருக்கிற டாக்டர் ஹரிகோவிந்தைப் பார்க்கப் போயிருக்கார். ஆனா டாக்டர் ஹரிகோவிந்த் வீட்ல இல்லை. டெல்லியில் நடக்கிற மருத்துவ கழக மாநாட்டில் தன்னோட ஆராய்ச்சிப் பற்றின உரையை நிகழ்த்தறதுக்காக போயிருக் காராம்... இருந்தாலும் இன்ஸ்பெக்டர் ஷ்யாம் சுந்தர் டாக்டர் வீட்டை சோதனைப் போட்டுப்

பார்த்து இருக்கார். சோதனையில் அவருடைய மேஜையின் இழுப்பறையில் சில பெண்களோட போட்டோக்கள் இருந்திருக்கு. அந்தப் போட்டோக்களில் உங்களுடைய மனைவி மிருணாளினியின் போட்டோவும் இருந்ததாம். அந்த டாக்டர் ஹரிகோவிந்த் உங்களுக்குத் தெரிஞ்சவரா...?”

“இல்லையே...?”


“பின்னே எப்படி உங்க மனைவியின் போட்டோ அவரிடம்...?”

“தெரியவில்லையே?” நீலக்கண்ணன் தலையாட்டிக் கொண்டிருக்கும்போதே அவருடைய செல்போன் முணுமுணுத்தது.

எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தான்.

பெயரைப் பார்த்ததுமே -

உடம்பில் பதட்டம் பற்றிக் கொண்டது.



## 16

***பேசும் வரை வார்த்தைகள் உனக்கு அடிமை.***
***பேசிய பிறகு அந்த வார்த்தைகளுக்கு நீ அடிமை.***

டெல்லி போலீஸ் கமிஷனர் அலுவலகம்.

கமிஷனர் வைபவ், சில உயர் அதிகாரிகள், யாதவ், அன்வர், சாதனா, அகஸ்டியன் அரைவட்டமாய் நாற்காலிகளைப் போட்டு உட்கார்ந்திருக்க, எதிரே டாக்டர் ஹரி கோவிந்த் தலைகுனிந்து உட்கார்ந்திருந்தார்.

வைபவ் பேசிக் கொண்டிருந்தார்.

"டாக்டர்...! நீங்கள் ஒரு மருத்துவ விஞ்ஞானி. அந்த படிப்புக்கு மரியாதை கொடுத்து உங்களிடம் பேசிக் கொண்டிருக்கிறேன். எந்த ஒரு மனிதனுமே ஒரு குற்றத்தை செய்துவிட்டு சட்டத்தின் பார்வைக்குத் தட்டுப்படாமல் சில நாட்களுக்கு மட்டுமேதிரைமறைவுவாழ்க்கையை நடத்த முடியும். அதற்குப் பிறகு என்றைக் காவது ஒரு நாள் சட்டம் அவனைப் பார்த்துவிடும். அதற்குப் பிறகு அவன் இந்த உலகத்தின் எந்த கோடிக்குப் போனாலும் சரி தப்பிக்கவே முடியாது.

உங்கள் நிலைமையும் இப்போது அப்படித்தான்...! நான் எந்த குற்றமும் செய்யவில்லை என்று சொல்லி நீங்கள் தப்பித்துக் கொள்ள முடியாது. உங்களுடைய மெடிக்கல் ரிசர்ச் கொலீக் டாக்டர் மது சூதனராவ் ஒரு கார் விபத்தில் என்றைக்குக் கொல்லப்பட்டரோ அன்றைக்கே டெல்லி சி.பி.ஐ. உங்கள் மேல் ஒரு சந்தேகப் புள்ளியை வைத்துவிட்டது. 'சிஏஎம்' எனப் படும் செல் ஒட்டுப்பசை ப்ரஜெக்ட் வெற்றியடைந்தற்கு எழுபது சதவீதம் டாக்டர் மதுசூதனராவின் உழைப்பாகத்தான் இருக்க முடியும்;என்றுமற்றடாக்டர்கள்மறைமுகமாய் கமெண்ட் அடித்தது சி.பி.ஐ.யின் வாய்க்கு கிடைத்த அவல். அந்த அவலை மென்று கொண்டு இருக்கும்போதே சென்னையைச் சேர்ந்த சி.பி.சி.ஐ.டி. போலீஸாரும் மூச்சு காட்டாமல் களத்தில் குதித்துவிட்டார்கள். அதன் விளைவு இப்போது நீங்கள் கார்னர் படுத்தப்பட்டு விட்டீர்கள். சிறிது நேரத்திற்கு முன்னால் ஹோட்டல் அறையிலிருந்து தப்பி வெளியே ஓடி வந்து ஏழாவது மாடியிலிருந்து

கீழே குதித்து தற்கொலை செய்யப் பார்த்தீர்கள். ஆனால் யாதவ், அன்வர் இருவரும் மின்னல் வேகத்தில் ஓடி வந்து உங்களைக் காப்பாற்றி விட்டார்கள். எந்த ஒரு மனிதனும் இயற்கையான முறையில் தான் சாக வேண்டும் என்று போலீஸ் விரும்புகிறது. ஒரு மனிதன் உயிரைப் பறிக்க இன்னொரு மனிதனுக்கு உரிமை கிடையாது. ஆனால் அந்த உரிமையை நீங்கள் கையில் எடுத்துக் கொண்டீர்கள். 'சிஏஎம்'செல் ஒட்டு பசை ப்ராஜக்ட் வெற்றி முழுமையாய் உங்களுக்குச் சேர வேண்டும் என்ற எண்ணத்தில் மதுசூதனராவை தீர்த்துக் கட்டியிருக்கிறீர்கள். அதற்கு உங்களுடைய உதவியாளர் சுபாஷ் சாட்சியாக உள்ளார். இந்த குற்றத்தை உங்களால் மறுக்க முடியுமா?"

கமிஷனர் வைபவ் கேட்டுவிட்டு ஹரி கோவிந்ததையே பார்க்க அவர் பெருமூச் சொன்றை வெளியேற்றிவிட்டு பேச ஆரம்பித்தார்.

"நான் இனிமேல் எதையும் மறைக்க விரும்பவில்லை. போலீஸ் என் மீது சந்தேகப் படாது என்கின்ற அசட்டு தைரியத்தில் பணத்துக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டு ஒரு கொலைகாரனாக மாறிவிட்டேன். ஒரு தப்பை முதல் தடவை செய்யும்போது மட்டுமே பயமாய் இருக்கும். தொடர்ந்து தப்புகளை செய்யும்போது அந்த பயம் காணாமல் போய்விடும். என்னுடைய விஷயத்திலும் அப்படித்தான் நடந்தது. டாக்டர் மதுசூதன ராவை முடித்ததும் ஒரு வருடம் கழித்து என்னுடைய 'செல் ஒட்டு பசை' ஆராய்ச்சிக்கு சில பெண்கள் தேவைப்பட்டார்கள். மனோ வியாதியால் பீடிக்கப்பட்ட சில பெண்களுக்கு மூளைப்பகுதியில் சில வேண்டாத எண்ணங்கள்தோன்றிக்கொண்டேயிருக்கும்.

அந்த வேண்டாத எண்ணங்கள் பதிவாகி யிருக்கும் மூளைப்பகுதியில் உள்ள சில நியூரான் செல்களில் உள்ள செல் ஒட்டு பசையை அகற்றுவதின் மூலம் அந்தப் பெண்களை மனோவியாதியிலிருந்து காப்பாற்ற முடியும் என்று நினைத்தேன். ERADICATION OF UNWANTED THOUGHTS. என்கிற அந்த சிகிச்சையை ஏதாவது ஒரு மனோவியாதிப் பெண்ணுக்கு செய்து பார்க்க விருப்பப்பட்டேன். அந்த சமயத்தில்தான் 'சாமரம்' என்கிற அமைப்பைப் பற்றியும், அங்கே வாழ்க்கையில் தோல்வி யுற்றுத் தற்கொலை எண்ணத்தோடு வரும் பெண்களுக்கு கவுன்ஸிலிங் கொடுப்பது பற்றியும் கேள்விப்பட்டேன். அது மாதிரியான பெண்களில் யாராவது பெண் கிடைத்தால் கூட பரவாயில்லை என்ற எண்ணத்தோடு கவுன்ஸிலிங் கொடுக்கும் ரஞ்சிதாவை ஒரு நாள் யார்க்கும் தெரியாமல் சந்தித்துப் பேசினேன்.

ரஞ்சிதா முதலில் மசியவில்லை. செல் ஒட்டு பசை சிகிச்சை தப்பான முடிவைக் கொடுத்துவிட்டால் சிகிச்சை செய்து கொண்ட பெண்ணின் மூளை ஏதாவது ஒரு வகையில் பாதிக்கப்பட்டு விடுமோ? என்று பயந்தாள். எனக்கும் அந்த பயம் இருந்தது. சிகிச்சை முறை வெற்றி பெறாவிட்டால் அந்தப் பெண்ணின் செயல்பாடுகள் விபரீதமாக இருக்கும். நல்லது எது! கெட்டது எது! என்று பகுத்துப் பார்க்கும் திறன் மங்கிப் போய் அவளுடைய இயல்பான வாழ்க்கை பாதிக்கப்படும்.

இது எல்லாம் எனக்கு தெரிந்திருந்தும்கூட ஆராய்ச்சியில் எப்படியாவது வெற்றி பெற வேண்டும் என்று நினைத்து ரஞ்சிதாவை வற்புறுத்த ஆரம்பித்தேன். அந்த சமயத்தில்

மிருணாளினி என்ற பெண் தன்னுடைய மூளையில் வேண்டாத எண்ணங்கள் தோன்றுவதாக கூறிக் கொண்டு 'சாமரம்' அமைப்புக்கு வந்தாள். பொற்கொடி என்ற பெண்தான் அவளுக்கு கவுன்சிலிங் கொடுத்தாள். ஆனாலும் ரஞ்சிதா அந்த மிருணாளினியை உன்னிப்பாய் அப்சர்வ் செய்துவிட்டு என்னிடம் அவளைப் பற்றிச் சொன்னாள்.

நான் மறுபடியும் ரஞ்சிதாவை வற்புறுத்த ஆரம்பித்தேன். பத்து லட்சம் ரூபாய் தருவதாக சொன்னேன். கடைசியில் பணத்துக்கு ஆசைப்பட்டு ரஞ்சிதா அந்த மிருணாளினியை யார்க்கும் தெரியாமல் என்னுடைய ஆராய்ச்சி கூடத்திற்கு கூட்டிக் கொண்டு வந்தாள். ஏதோ ஒரு மனோவியாதியால் பாதிக்கப்பட்டு இருந்த அவளை குணப்படுத்துவதாக தைரியம் சொல்லி நான் தயாரித்து வைத்து இருந்த ஸீரத்தை அவளுடைய கழுத்துப் பாகத்தில் இஞ்செக்ட் செய்தேன். ஒரு மணி நேரம் கழித்து அனுப்பிவிட்டேன். நான் எதிர் பார்த்தபடி சிகிச்சை பலனளிக்கவில்லை என்பதை அடுத்த சில நாட்களிலேயே புரிந்து கொண்டேன்."

"எப்படி...?"

"மிருணாளினியே என்னை அடிக்கடி பார்க்க வந்தாள். முன்பைக் காட்டிலும் மன உளைச்சல் அதிகமாய் இருக்கிறது என்றும், சந்தோஷமாய் இருப்பவர்களைப் பார்த்தால் அவர்களை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் வெறித்தனமாய் தோன்றுவதாகவும், ஒரு தடவை டி,வி. பார்த்து ரசித்து சிரித்துக் கொண்டிருந்த தன்னுடைய கணவர் நீலக்கண்ணனையே கொலை செய்ய வேண்டும் போன்ற எண்ணம் தோன்றிய

தூாகவும் சொன்னாள். அவள் அப்படி சொன்னதும் நான் அதிர்ந்து போய்விட்டேன்,. பிள்ளையார் பிடிக்கப் போய் அது குரங்காய் முடிந்து போனதே என்று பயந்தேன். எல்லாம் சரியாகிவிடும் என்று அவளுக்கு ஆறுதல் சொன்னேன். ஆனாலும் மிருணாளினி என்னைக் கடைசியாய் சந்தித்துவிட்டு போகும்போது 'நான் என்னுடைய கணவரை உயிர்க்கு உயிராய் நேசிக்கிறேன். ஆனாலும் அவரையே கொலை செய்ய வேண்டுமென்ற எண்ணம் நாளுக்கு நாள் எனக்குள் வளர்ந்து கொண்டு வருவதால் நான் என்னையே அழித்துக் கொள்ள முடிவு எடுத்துவிட்டேன். நான் வெகு சீக்கிரத்திலேயே தற்கொலை செய்து கொள்ளப் போகிறேன் என்று சொல்லிவிட்டு போனாள். அதன்படியே தற்கொலை செய்துக் கொண்டாள்."

சாதனா குறுக்கிட்டுக் கேட்டாள். "சரி ரஞ்சிதா ஏன் தற்கொலை செய்து கொண்டாள்?"

"மிருணாளினி தற்கொலை செய்து கொண்டு இறந்து போன நாளிலிருந்து ரஞ்சிதா மனம் உடைந்து போய்விட்டாள். மிருணாளினியை கவுன்ஸிலிங் கொடுப்பது மூலமாகவே என்னால குணப்படுத்தியிருக்க முடியும். உங்களிடம் அழைத்து வந்து அவளுடைய இறப்புக்கு காரணமாய் இருந்துவிட்டேன் என்று சொல்லி சொல்லி என்னிடம் வருத்தப்பட்டாள். அவளிடம் இருந்த குற்ற உணர்ச்சியே அவளைத் தற் கொலை வரைக்கும் கொண்டு போய் விட்டது."

"உங்களால் இரண்டு பெண்கள் தற் கொலை செய்து கொண்டு இறந்து போயிருக்கிறார்கள். உங்களுக்கு மட்டும் குற்ற உணர்ச்சி வரவேயில்லை... அப்படித் தானே...!"

ஹரிகோவிந்த பேசாமல் தலைகுனிந்து நிற்கசாதனா தீப்பொறிகளாய் வார்த்தைகளை உதித்தாள்.

"டாக்டர்! வெள்ளை கோட் அணிந்த உங்கள் மனதுக்குள் ஒரு கறுப்புச் சாத்தான் எப்படி நுழைந்தான்...? ஒரு ஆபரேஷனை செய்ய ஒரு கையில் கட்டாரியும், இன்னொரு கையில் கோடாலியும் எடுத்துக் கொண்டு புறப்பட்டது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்பது உங்களுக்குப் புரியவில்லையா...? எதையுமே நீங்கள் முறையாக செய்ய வில்லையே? பணத்துக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டு சக டாக்டரைக் கொன்றுவிட்டு சிஏஎம் ப்ராஜக்ட் தன்னுடைய முயற்சி என்று சொல்லிக் கொண்டீர்கள். செல் ஒட்டு பசை மூலம் மனிதனின் உடம்பு ரீதியான பிரச்னை களுக்கும், மனரீதியான பிரச்னைகளுக்கும் தீர்வு காண முடியும் என்பது மிகமிக நல்ல விஷயம். ஆனால் அதை நீங்கள் அரசாங் கத்திற்கு எடுத்துச் சொல்லி அரசு அனுமதியோட முறைப்படி சோதனைகளை மேற்கொண்டு இருக்கலாம். இறக்கும் தறுவாயில் உள்ள நோயாளிகளுக்கு அந்த சோதனைகளைச் செய்து பார்த்து இருக் கலாம்."

சாதனா சொல்ல போலீஸ் கமிஷனர் வைபவ் பெருமூச்சொன்றை வெளியெற்றி விட்டு தோள்களைக் குலுக்கினார்.

"இனிமேல் அதைப்பற்றி பேசிப் பயனில்லை. டாக்டரின் வாக்குமூலத்தை பதிவு செய்து கொண்டாயிற்று. இனி சுபாஷின் வாக்குமூலத்தை பதிவு செய்ய வேண்டும். பிறகு அந்த சுனில் சர்மா..."

சுனில் சர்மாவின் பெயரைக் கேட்டதும் டாக்டர் ஹரிகோவிந்த் நிமிர்ந்தார். கமிஷனர் புன்னகைத்தார்.

“என்ன டாக்டர்... அப்படி பார்க்கிறீர்கள்...? உங்களுக்கு மேடையில் துண்டுச்சீட்டு கொண்டு வந்து கொடுத்த அதே சுனில் சர்மாதான். உங்கள் ஆள் தியோடராய் இருந்து இருந்தால் அவன் நிச்சயம் லாரியை ஏற்றி சுனில்சர்மாவைக் கொன்று இருப்பான். ஆனால் நீங்கள் பேசியது பார்த்தது எல்லாமே எங்களுடைய ஆளான அகஸ்டினிடம் தானே...? ஸோ சுனில்சர்மாவும் இப்போது எங்கள் கஸ்டடியில்தான் இருக்கிறான். அப்புறம் இன்னொரு சந்தேகம். உங்க ளுடைய மனசுக்குள் இருக்கலாம். ‘மஸ்குலர் டிஸ்ட்ரபி’ என்ற நோயை சுபாஷுக்கு வரவழைப்பதற்காக விஸ்கியில் அதனுடைய ஸீரத்தை கலந்து அவனுக்கு கொடுத்தும் நோய் அவனைக் தாக்கவில்லையே! ஆள் நன்றாக இருக்கிறானே என்று நீங்கள் ஆச்சர்யப்படலாம். ஸீரம் கலந்த விஸ்கி பாட்டிலை அகற்றிவிட்டு வேறு ஒரு விஸ்கி பாட்டிலை வைத்தது அகஸ்டின்தான். தியோடர் இருந்த இடத்தில் அகஸ்டின் இருந்ததால் நீங்கள் இரண்டு கொலை முயற்சி பாவங்களிலிருந்த தப்பிவிட்டீர்கள்.”

சாதனா நாற்காலியினின்றும் எழுந்தாள். கூடவே யாதவ் அன்வர் எழுந்தார்கள்.

“ஓ.கே. ஸார்...! நாங்கள் எதற்காக டெல்லி வந்தோமோ அந்தப் பணி நன்றாகவே முடிந்தது. மிருணாளினி இறந்து போனது ஒரு ஞாயிற்றுக் கிழமை. எனவே இந்த கேஸ் இன்வெஸ்டிகேட் செய்யும் முன்பு இதற்கு ‘ப்ளாக் சண்டே’ என்று பெயர் வைத்தோம். அதையே ஒரு கோட் வேர்டாகவும் பயன் படுத்திக் கொண்டோம். இனி அந்த ஃபைல் க்ளோஸ்ட்.”

கமிஷனர் குறுக்கிட்டார்.

"என்ன ஒரு ஆச்சர்யம் பாருங்கள் மிஸ் சாதனா. நீங்கள் ஒரு கேஸை இன்வெஸ்டிகேட் செய்வதற்கு, அதற்கு 'ப்ளாக் சண்டே' என்ற பெயர் வைத்துள்ளீர்கள். நாங்கள் அந்த கேஸை முடிப்பதற்கு ஒரு கோட் வேர்டாக என்ன வார்த்தையை பயன்படுத்திக் கொண்டோம் தெரியுமா?"


"சொல்லுங்கள் ஸார்."

"ரெட் மண்டே...!"

"எதனால் அந்தப் பெயர்?"

"இன்றைக்கு என்ன கிழமை! திங்கட் கிழமை! டாக்டர் ஹரிகோவிந்த் செமினாரில் பேசிவிட்டு சென்னை திரும்புவதற்குள் இன்றைக்கே அவரை 'ட்ராப்' செய்து லாக்கப்புக்குள் கொண்டு வர வேண்டும் என்று எல்லோரும் செயல்பட்டோம். அதை முடித்துவிட்டோம்."

டாக்டர் ஹரிகோவிந்ததைத் தவிர மற்ற எல்லோரும் சிரித்தார்கள்.



# 17

***அரிய சாதனைகள் நிகழ்த்தப்படுவது வலிமையால் அல்ல விடாமுயற்சியால் தான். செயலை விதையுங்கள பழக்கம் உருவாகும்.***
***பழக்கத்தை விதையுங்கள் குணம் உருவாகும்.***
***குணத்தை விதையுங்கள் எதிர்காலம் உருவாகும்.***

நீலக்கண்ணன் செல்போனை காதுக்கு பதட்டமாய் ஒற்றினான்.

"சொல்லு சாதனா... நீயும் உன்னோட ஸ்டாஃபும் டெல்லிக்கு போனது என்னாச்சு?"

"எல்லாம் நல்லபடியா முடிஞ்சது நீல்... எல்லாத்துக்கும் காரணமான ஹரிகோவிந்த் இப்போ திஹார்ன் தனிமைச் சிறையில்."

"மிருணாளினி தற்கொலைப் பண்ணிக்க என்ன காரணம்? யார் காரணம்...?"

"ஃபோன்ல எதுவும் வேண்டாம். நான் நேர்ல வந்து சொல்றேன்... ஏன்னா உனக்கு விஷயம் தெரியும் போது மிருணாளினியை நினைச்சு புதுசா அழ ஆரம்பிப்பே... அந்த சமயத்துல சொல்ல, உனக்குப் பக்கத்துல நான் இருக்க வேண்டாமா....?"

"என்ன சாதனா... புதிர் போடறே?"

"இது புதிர் இல்லை... மிருணாளினியோட இன்னொரு பக்கம். நான் நேர்ல வந்து எல்லாத்தையும் சொல்றேன்... இப்போதைக்கு கம்பெல் பண்ணாதே...!"

"ஓ...கே... ஓ..கே...! நீ சென்னைக்கு எப்போ ரிடர்ன்...?"

"நாளைக்குக் காலையில்!"

"சென்னையைத் தொட்டதும் நேரா என்னோட ஆபீஸுக்கு வந்துடு சாதனா..."

"வந்துடறேன்" மறுமுனையில் சாதனா சொல்ல நீலக்கண்ணன் செல்போனை அணைத்துவிட்டு எதிரில் உட்கார்ந்து இருந்த வெற்றிவேல் முருகனை ஏறிட்டான்.

"எல்லாத்துக்கும் காரணமான அந்த டாக்டர் ஹரிகோவிந்ததை போலீஸ் மடக் கிட்டாங்க... அவங்களுக்கு இது ஒரு வெற்றிகரமான கேஸ். பட் எனக்கு என்

வாழ்க்கையோட பாதியை இழந்துட்ட உணர்வு..."

"மிஸ்டர் நீலக்கண்ணன்...! வாழ்க்கையில் நமக்கு ஏற்படுகிற இன்ப துன்பங்களை ஒரே மாதிரி நினைக்கணும். இன்பம் வந்தா துள்ளி குதிக்கவும் வேண்டாம். துன்பம் உண்டாகும் போது துவண்டு போய் விடவும் வேண்டாம். நடப்பது எல்லாம் நன்மைக்கு என்ற உணர்வு நமக்கு வந்துவிட்டால் வாழ்க்கையோட ஒவ்வொரு விநாடியும், ஒவ்வொரு தேன் துளி போல் இனிக்கும்."

வெற்றிவேல் முருகன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே எதிரில் உட்கார்ந்து இருந்த நீலக்கண்ணனின் தோள் மேல் எதுவோ 'பொத்'என்று விழுந்தது.

மல்லிகைச்சரம்.

தலையை உயர்த்திப் பார்த்தான். சுவரில் மாட்டியிருந்த மனைவி மிருணாளினியின் போட்டோ வெறுமையாய் மல்லிகைச் சரம் இல்லாமல் தெரிந்தது.

வெற்றிவேல் முருகன் புன்னகைத்தார்.

"உங்க மனைவி மிருணாளினி என்ன சொல்றாங்க?"

"வீட்டுக்குப் போங்க... நேரமாச்சுன்னு சொல்றா..." நீலக்கண்ணன் சிரித்துக் கொண்டே சொன்னாலும் அவனுடைய கண்களில் நீர் துளிர்த்து பளபளத்தது.

**(முற்றும்)**

Owned & Published by **VIJI** on behalf of **RAAJ SRI PUBLICATIONS**, 49-B, SURYA AVENUE, Near Kurinji Nagar, Chrompet, Chennai- 600 044.Printed at Wonder Prints, Chennai-5.